# மாஜுக்கரின் காந்தி



941.03
காந்தி
SUPR

1969

# மானுக்கரின்
# காந்தி

காந்தி நூல்கள்
ஐந்துள்
இதுவும் ஒன்று



# மாணுக்கரின் காந்தி

தொகுப்பாசிரியர்:

ஆர். பாலகிருஷ்ணன்

ரி. எல். எம். புகாரி

அரசு வெளியீடு: 22



விலை 120/=

வெளியீட்டாளர்:

எம். ஏ. ரஹ்மான்

அரசு வெளியீடு,

231, ஆதிருப்பள்ளித் தெரு,

கொழும்பு-13 (இலங்கை).

First Edition:
Gandhi Centenary (1969)

Price: 120/

# Maanaakkarin Gandhi

Compiled & Edited by:

R.Balakrishnan

T.L.M.Buhari

Published
under the auspices of
Ilampirai
by
M. A. Rahman
ARASU PUBLICATIONS
231 Wolfendhal Street
Colombo-13 (Ceylon)



மெதடிஸ்த மத்திய கல்லூரி மாணவர் பொன். அநுராவின் (வயது பத்து) கனிஷ்ட பிரிவுப் பேச்சு 9




அரசடி மகா வித்தியாலய மாணவி ந. ஜெயமணியின் (வயது பத்து) கனிஷ்ட பிரிவுப் பேச்சு 12



ஆனைப்பந்தி பெண்கள் ஆங்கிலப் பாடசாலையின் மாணவி பொன். மேகலாவின் (வயது பதினொன்று) கனிஷ்ட பிரிவுப் பேச்சு 15



சிவானந்த வித்தியாலய மாணவர் கா. கனகசுந்தரத்தின் (வயது பதினொன்று) கனிஷ்ட பிரிவுப் பேச்சு 18



புனித மிக்கேல் கல்லூரி மாணவர் ஆர். சோமசுந்தரத்தின் (வயது பன்னிரண்டு) கனிஷ்ட பிரிவுக் கட்டுரை 22



மெதடிஸ்த மத்திய கல்லூரி மாணவர் ந. சதானந்தனின் (வயது பன்னிரண்டு) கனிஷ்ட பிரிவுக் கட்டுரை

24



வின்சன்ட் மகளிர் உயர் பாடசாலை மாணவி எஸ். தம்பிராஜாவின் (வயது பன்னிரண்டு) கனிஷ்ட பிரிவுக் கட்டுரை

27



புனித மிக்கேல் கல்லூரி மாணவர் எஸ். சாந்தராஜாவின் (வயது பன்னிரண்டு) கனிஷ்ட பிரிவுக் கட்டுரை

30



கோட்டைமுனை மகாவித்தியாலய மாணவி த. ஜெயவேணியின் (வயது பதின்மூன்று) மத்திய பிரிவுப் பேச்சு


32



ஆனைப்பந்தி பெண்கள் ஆங்கிலப் பாடசாலையின் மாணவி நி. காஞ்சனாவின் (வயது பதின்மூன்று) மத்திய பிரிவுக் கட்டுரை

36





வந்தாறுமூலை மத்திய மகா வித்தியாலய மாணவி கே. சஞ்சீவரத்தினத்தின் (வயது பதினான்கு) மத்திய பிரிவுக் கட்டுரை

39



கோட்டைமுனை மகா வித்தியாலய மாணவி ரி. விஜயகுமாரியின் (வயது பதினான்கு) மத்திய பிரிவுப் பேச்சு

42



மெதடிஸ்த மத்திய கல்லூரி மாணவர் வி. யோகராஜாவின் (வயது பதினைந்து) மத்திய பிரிவுப் பேச்சு

47



புனித மிக்கேல் கல்லூரி மாணவர் எம். துரைராஜசிங்கத்தின் (வயது பதினேழு) சிரேஷ்ட பிரிவுப் பேச்சு

51



பட்டிருப்பு மகா வித்தியாலய மாணவர் எஸ். மொஹிதீன் பாவாயின் (வயது பதினெட்டு) சிரேஷ்ட பிரிவுப் பேச்சு

55



வின்சன்ட மகளிர் உயர் பாடசாலை மாணவி இ. நாமோதரம்பிள்ளையின் (வயது பத்தொன்பது) சிரேஷ்ட பிரிவுப் பேச்சு 59



ஆனைப்பந்தி பெண்கள் ஆங்கில பாடசாலை மாணவி எம். விமாவதியின் (வயது பத்தொன்பது) சிரேஷ்ட பிரிவுக் கட்டுரை 64

## ஒரு குறிப்பு

இதன் தொகுப்பாசிரியர்களாக ஆர். பாலகிருஷ்ணன், ரி. எல். எம். புகாரி ஆகிய இருவரும் இத் தொகுப்புப்பணியினை மிகவும் நிதானத்துடன் செய்துள்ளார்கள். புணரியல் நீங்கலாக, இலக்கண வழுக்களைத் திருத்திக் கையெழுத்துப் பிரதி எடுத்தல் சிரமசாத்தியமான பணி. அத்துடன் எத்தனையோ வரலாற்று வழுக்களும், கருத்துப் பிழைகளும் விரவிக் கிடந்ததைப் பார்வையிட்டு, மிக மிக அவசியமான வழுக்களை மட்டுமே களைந்தார்கள். சில வழுக்களை நீக்காது அச்சிலே தரவேண்டிய அவசியமும் அவர்களுக்கு ஏற்பட்டது. காரணம் அவற்றையும் நீக்கிவிட்டால், தொகுப்பாசிரியர்களே மாணாக்கரின் விடயங்களைப் புதிதாக எழுதிச் சேர்த்திருக்கும் அவதியும் ஏற்பட்டிருக்கும்.

எனவே, இங்குள்ள கருத்துக்கள் அனைத்தும் ஆதார பூர்வமானவை எனக் கொள்ள வேண்டாமெனச் சிறுவர்களைக் கேட்டுக் கொள்ளுகின்றேன். சிறுவர் இலக்கியமாக நான் எழுதியுள்ள 'காந்தி போதனை' என்ற நூலில் அதிகார பூர்வமான தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

எம். ஏ. ரஹ்மான்

# பதிப்புரை

காந்தி நூற்றாண்டு நினைவாக ஐந்து நூல்களை வெளியிடுவதிற் பெருவகையடைகின்றேன். தமது பிரார்த்தனைகளிலே அல்லாஹ்வின் திருவசனத்தையும் உச்சரித்து, பாரத நாட்டிலுள்ள ஆறு கோடி முஸ்லிம்களுந் தலை நிமிர்ந்து வாழத் தன்னம்பிக்கை யூட்டும் பணியிலே தமது உயிரையே பலியிட்ட அந்த இனியவரின் நினைவாக ஐந்து நூல்களை ஏககாலத்தில் வெளியிடுவதால் உவகை இரட்டிப்பாகின்றது.

ஐந்து நூல்களுள் இதுவும் ஒன்று. ஈழத்து இலக்கிய அன்பர்களும், தமிழ் நூல் வெளியீட்டாளரும் இதனை ஒரு சாதனை என்றே கருதுவர். இப்பெருமையை எனக்குரியதாக எடுத்துக் கொள்ளாது, உலகிலே அன்பினாற் சாதனைகள் பல புரிந்த அந்த மஹாத்மாவுக்கே இச்சாதனையையும் பயனையும் அர்ப்பணமாக்குகின்றேன்.

இலக்கியப் பணியில் நான் கட்டித்த கொள்கையுடையவன். இலக்கியப் படைப்பு சுய வித்துவ சாதனையாக மட்டுமல்லாது, சுவைஞனின் நெஞ்சக் களிப்புக்குஞ் செழிப்புக்கும் உதவுதல் வேண்டும் என்பது என் ஆசை. சுவைஞரின் வகையும், சுவைப்பு முறையும் பல் வகைத்து ஆனால், அன்றும்-இன்றும்-என்றும் என் சிந்தையில் முதலிடம் பெறுஞ் சுவைஞர்கள் சிறார்களே. அவர்களை மிகவும் நேசிக்கின்றேன்; அவர்களுடைய சுவைப்பினைப்

பெரிதும் மதிக்கின்றேன். அவை பழுது படாதன. செழுமை பெற வல்லன. அவர்களுடைய சுவைப்பிற்காகவே, 'இளமைப் பருவத்திலே' என்ற என் முதல் நூலை ஏழு ஆண்டுகளுக்கு முன்னர் எழுதி வெளியிட்டேன்.

சிறுவர் இலக்கியத்திற்கு அப்பாற்படவும் எழுத நேர்ந்தது. நிர்ப்பந்தம் வளைந்த தளத்தில் அதுவுஞ் சரியே. ஆனால், சிறுவர் இலக்கியத்திற்கு வனப்பூட்டும் நூல்கள் படைத்தல் வேண்டும், வெளியிடுதல் வேண்டும என்ற ஆர்வம் மட்டும் என்றுமே தணிந்ததில்லை. அத்துடன், சிறுவருடைய இலக்கிய ஆர்வத்திற்குப் பண்ணை அமைத்தல் வேண்டுமென்ற சித்தமுந் தளரவில்லை.' இவ்வேதுக்கள் தோற்றியே என் நிர்வாகப் பொறுப்பில் வெளிவரும் 'இளம்பிறை' மாசிகையில் 'வளரும் பயிர்' 'கல்லூரி மன்றம்' ஆகிய பகுதிகளை ஆரம்பித்து, சிறுவரின் கன்னிப் படைப்புகளைப் பிரசுரித்து வருகின்றேன். ஐந்து நூல்களுள் ஒன்றான இதனைச் சிறாரின் இலக்கிய ஆக்கத்திற்குப் பங்கிட்டுக் கொடுத்தமைக்கு அவர்களுடைய இலக்கிய ஆர்வம் வளர்க்கப்படல் வேண்டும் என்பதில் நான் கொண்டிருக்கும் அக்கறையே காரணம். இதில் இடம் பெற்றுள்ள சிறாரின் ஆக்கங்களுக்குப் பின்னால், பெரியவர்களுடைய நிழல்கள் நெடிதுயர்ந்து நிற்பதை அவதானிக்க முடிகின்றது. கால ஓட்டத்தில், சிறுவருடைய இலக்கிய வளர்ச்சி என்னும் ஒளியில், இந்த நிழல்கள் மறைந்துவிடும் என்பது என் நம்பிக்கை. இந்த நம்பிக்கையின் விதை மிகவும் மானசீகமானது. சிறுவர்களுடைய படைப்புகளைத் தாங்கிச் சஞ்சிகைகள் பல வெளிவந்தன-வருகின்றன ஆனால், அவர்களுடைய படைப்புக்களை மட்டுமே தாங்கி ஈழத்தில் வெளிவரும் முதலாவது நூல் இதுவே. இந்த நூல் சிறுவர்களுடைய இலக்கிய ஆர்வத்தை வளர்த்து, அவர்கள் மத்தியில் புதிய இலக்கியகாரர் மலர்வார்களேனால், அதைப் பார்க்கிலும் நானடையக்கூடிய மகிழ்ச்சி பிறிதில்லை. இன்னும் ஒன்று. இது சிறுவர்கள் எழுதிய நூலே தவிர, சிறுவர்



இலக்கிய நூலன்று என்பது கவனத்திற்குரியது. இரண்டிற்கும் பாரிய வேறுபாடு உண்டு.

அகில இலங்கையிலும், மாணுக்கருக்காக நடைபெற்ற காந்தி நினைவுப் போட்டிகளிற் பரிசு பெற்ற நாற்பது கட்டுரைகளையும் பேச்சுகளையும் இத் தொகுதியிலே திரட்டல் வேண்டுமென்பது என் நோக்கமாக இருந்தது. யாழ்ப்பாணம் போன்ற பகுதிகளிலே இப் போட்டிகள் முற்றுப் பெறவில்லை. எனவே, கிழக்குப் பிராந்தியத்தில் வெற்றி பெற்ற பதினேழு விடயங்களை மட்டுமே இந்நூலிற் சேர்க்க முடிந்தது. இவற்றை வெளியிட இன்முகத்துடன் அனுமதி வழங்கிய காந்தி நூற்றாண்டு விழாக்குழு (மட்டக்களப்பு மாவட்டம்) வினருக்கு—குறிப்பாக அதன் தலைவரும் அரசாங்க அதிபருமான தே. நேசையா அவர்களுக்கும், செயலாளரும் மத்திய கல்லூரி அதிபருமான பி. ரி. சின்னையா அவர்களுக்கும்—என் நன்றிகள். மிகக் குறுகிய காலத்தில், இவற்றைத் தொகுத்து விபரங்கள் தருவித்து, புகைப்படங்கள் சேர்த்துப் பலபட உழைத்த தொகுப்பாசிரியர்களான ஆர். பாலகிருஷ்ணன், ரி. எல். எம் புகாரி ஆகிய இலக்கிய ஆபிமானிகளான இரு ஆசிரியர்களுக்கும் என் நன்றிகள். காந்திஜியைக் 'கண்ட' மாணுக்கருக்கும், அவர்கள் தம் இலக்கியத்தைச் சுவைப்போருக்கும் என் அன்பு.

காலமோ குறுகியது; பணியோ நெடிது. எனவே, சக அச்சக அன்பர்களுடைய ஒத்துழைப்பை நாட நேர்ந்தது. இந் நூலின் பெரும் பகுதி சுதந்திரன் அச்சகத்தில் அச்சிடப்பட்டது. இப்பணியில் சுதந்திரன் அச்சக ஊழியர்கள்—குறிப்பாக அதன் முகாமையாளர் திரு க. உமாபதிசிவம் அவர்கள்-தந்த இனிய ஒத்துழைப்பு என்றும் என் நினைவை விட்டகலாது.

**எம். ஏ. ரஹ்மான்**

# நன்றியுரை

இந்நூலிலுள்ள விடயங்களை எப்படி வரிசைப்படுத்துவது என்பதுதான் முதலிலே தோன்றிய பிரச்சினை. கட்டுரைகளை ஒரு பிரிவாகவும், பேச்சுக்களை மறுபிரிவாகவும் வகுத்திருக்கலாமா? மாணவர் — மாணவிகள் என்று வகுத்திருக்கலாமா? பரிசு பெற்ற வரிசையிலே தொகுத்திருக்கலாமா? பின்னது புத்தி பூர்வமான காரியமாகவே தோன்றியது. ஆனால், அப்படி வகுத்திருந்தால், சில இடங்களிலே நீதியின் தராசு சரியாகக் கையாளப்படவில்லை என்ற உண்மையையும் விளக்கிய 'பழி' நம்மீது சுமத்தப்பட்டுவிடுமோ என அஞ்சினோம். எனவே, கீழ்ப் பிரிவு மாணாக்கருக்கு முக்கியத்துவங் கொடுத்து, பிறந்த தேதிகளை வைத்து, கீழிருந்து மேலாக வரிசைப்படுத்துதல் சிறப்புடைத்து எனக் கருதி அவ்வாறே செய்தோம். வழுக்கள் களையும் வேலையில், இறுக்கமான புணரியலைப் புகுத்தவில்லை. அது மட்டுமாவது இவை மாணாக்கரின் சுய சிருட்டிகள் எனத் தோற்றந்தர உதவலாமல்லவா?

இத் தொகுப்பு வேலையில் உதவிய அதிபர்கள் பி. ரி. சின்னையா, திருமதி க. திருநாவுக்கரசு, கே. அருணாசலம் ஆகியோருக்கும், ஆசிரியர்கள் அன்றியஸ், வி. சிவசுப்பிரமணியம், கே. அமரசிங்கம், மா. சிவநேசராசா, கே. குமாரகுலரத்தினம், நண்பர் தாமோதரம்பிள்ளை ஆகியோருக்கும் நமது நன்றிகள். இவற்றைத் தொகுக்க அனுமதி வழங்கிய மாவட்ட காந்தி நூற்றாண்டு விழாத் தலைவர்–அரசாங்க அதிபர் டி. நேசையா அவர்களுக்கும் செயலாளர் பி. ரி. சின்னையா அவர்களுக்கும் நாம் பெரிதும் கடமைப்பட்டுள்ளோம். உரிய காலத்தில் புகைப்படங்கள் தந்துதவிய மாணாக்கரின் அன்புக்கும் நன்றி.

ஆர். பாலகிருஷ்ணன்
ரி. எல். எம். புகாரி

ஏறாவூர்
2–10–69



குறுநடை: ஒன்று

## பொன். அநுரா

அன்பும் பண்பும் கெழுமிய தலைவர் அவர்களே! அறிவு சார்ந்த அவையோரே! நியாயம் வழங்கும் பெற்றியரான நடுவர்களே! என் அன்பு வணக்கம். போர்பந்தர் என்னும் ஊரிலே, கரம்சந் காந்திக்கும் புத்தாளிபாய்க்கும் மகனாக, 1869 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் இரண்டாம் நாள் மோகனதாஸ் காந்தி பிறந்தார் எனத் தொடங்கி, 1948-ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 30-ஆம் நாளன்று ஓர் இந்து வெறியனின் துப்பாக்கிச் சூட்டிற்குப் பலியானார் என்பது வரையிலும், தேதிகள் சிலவற்றைக் கிளிப்பிள்ளை மாதிரி ஒப்புவிப்பதினால் நாம் காந்தியின் உண்மையான சொரூபத்தைத் தரிசித்தல் சாலாது.

உண்மையான காந்தியைத் தரிசிப்பதற்கு முன்னர் இரண்டு காட்சிகளை உங்கள் மனக்கண் முன் கொண்டு வாருங்கள். ஒரு காட்சி; வாளும் வாளும், வேலும்

வேலும், ஈட்டியும் ஈட்டியும், குதிரையும் குதிரையும், யானையும் யானையும், ரதமும் ரதமும், மல்லனும் மல்லனும் பொருதுகின்ற சமர்க்களத்திலே, 'ஈட்டிமுனை கண்டு இமைகொட்டியவன் கோழை, அதைத் தனது இதய கீதமாக்கிக் கொண்டவன் தமிழன்' என வீறுகொண்டு எழுகின்றான் ஒருவன். அவனை 'மறத் தமிழன்' என பாராட்ட முந்துகின்றார்கள் சங்ககாலப் புலவர்கள். பிறிதொரு காட்சி: முப்படையும் துணைக்கு நிற்கும் வல்லபத்துடன், நவீன விஞ்ஞானப் போர்க்கருவிகள் தாங்கி, பாரத அன்னையை நிலத்திலே வீழ்த்தித் துன்புறுத்துவதில் இன்பங் காணுகின்றார்கள் ஆங்கிலேய வீரர்கள். 'அன்னையின் மானம் காப்பேன்' எனக் குரல் கொடுத்து, கோலூன்றி, மெலிந்த ஒல்லியான உருவம் ஒன்று அவ்விடம் வருகின்றது. 'கிழவா, விலகி நில்! மது படை பலத்தை நீ அறிவாய்?' என ஆங்கிலேயர்கள் உறுமுகின்றார்கள். 'உங்கள் படை பலத்தை நான் அறிவேன். அதிலும் பார்க்க ஆயிரம் மடங்கு சக்தி மிக்கது நான் அன்பு என்ற உலைக்களத்தில் வடித்து எடுத்துள்ள அகிம்சை என்னும் ஆயுதம் என்பதை அறிந்து கொள்ளுங்கள்' என்கின்றார் அக் கிழவர். 'நீர் அரை நிர்வாணப் பக்கிரி. போர்க்களம் வந்திருக்கிறீர்! உம்மைப் பாதுகாத்துக்கொள்ள உம்மிடம் எந்தக் கேடயமும் கிடையாது' என வீரர்கள் ஏளனஞ் செய்கின்றார்கள். 'உண்மை என்ற கவசத்தை நான் தாங்கி நிற்பதை நீங்கள் அறியவில்லையா? உங்களுடைய பாவங்களுக்காகவும் என்னுடைய உடலை வருத்திக் கொள்ளும் துணிவு என்னிடம் இருக்கிறது' எனக் கூறும் அக்கிழவர் உறுதியாக முன்னேறுகின்றார். அந்த ஒடிந்த உடலிலே குடிகொண்டிருக்கும் நெடிய உறுதியைக் கண்டு படைவீரர்கள் நாணுகின்றார்கள். மாபெரும் சாம்ராச்சியத்திற்கு எதிராக அக்கிழவர் தொடுத்த அகிம்சை யுத்தத்தில் அக்கிழவரே வெற்றி வாகை சூடுகின்றார். அந்தக் கிழவரே மகாத்மா காந்தி என்பதை நான் சொல்லாமலே நீங்கள் அறிவீர்கள்.



சத்தியம் அகிம்சை என்ற இரண்டு முகங்களைக் கொண்ட தர்ம நாணயத்தை உருவாக்கினார். காலதேச வர்த்தமானங்களைக் கடந்து செல்லும் மதிப்பு அதற்கு உண்டு. உலகிலே கீர்த்தி பெற்ற அநேகர் ஏதேனும் ஒரு துறையில் மட்டுமே மேன்மை பெற்று விளங்கினார்கள். இது வரலாறு பகரும் உண்மை. ஆனால், காந்தி மகானின் அன்புப் பார்வை பட்டுப் புனிதமடையாத வாழ்க்கையின் எந்தத் துறையுமே இல்லை என்பதைத் துணிந்து கூறலாம். இராஜதந்திரி, அரசியல்வாதி, சீர்திருத்தச் செம்மல், சமூகத் தொண்டர், சத்தியாக்கிரகி, விடுதலைப் போராளி, தீண்டாமையின் வைரி, மதுவின் எதிரி, மாதர் விடுதலை இயக்கத்தின் தலைமகன், குரு போதகர், மனிதாபிமானி, சர்வதேச மித்திரன், சத்தியபரிசோதகர், ஞானி, புனிதர், மகான், மகாத்மா எனப் பலபட அவர் காட்சியளிக்கின்றார். ஒல்லியான மெல்லிய உடலமைப்புக் கொண்ட இந்தக் குறுமுனி சாதித்தவற்றைப் போன்று இந்த இருபதாம் நூற்றாண்டின் வரலாற்றில் வேறெந்தத் தனி மனிதனுஞ் சாதிக்கவில்லை.

இதனாலன்றோ, 'கங்கை நீரிலும் புனிதமானவர்; இமயத்திலும் பார்க்க உயர்ந்து நிற்பவர்' என உயிர் வாழ்ந்த காலத்திலேயே கோடானு கோடி மக்களாற் போற்றப்பட்டார். காலத்தால் அழியாது, வெந்தழலால் வேகாது அவர் புகழ். வாழ்க அவர் நாமம்.



பொன் அநுரா
மெதடிஸ்த மத்திய கல்லூரி
*1-11-59*
பேச்சு



குறுநடை: இரண்டு

## த. சிவமணி

அவைத் தலைவர் அவர்களே! முதற்கண் உங்களுக்கு என் வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

"கத்தியின்றி ரத்தமின்றி யுத்தமொன்று வருகுது
சத்தியத்தின் உண்மைதன்னை நம்பும் யாரும் சேருவீர்"

என்று, காந்தியின் சத்திய யுகத்திற்கு அறை கூவப் பாடினான் நமது தமிழ்க் கவிஞன் ஒருவன். ஆம், கத்தியின்றி ரத்தமின்றி காந்தி வெள்ளையருடன் நடத்திய போர் தான் இந்தியாவுக்குச் சுதந்திரத்தை வாங்கித் தந்தது. இந்தியாவில் ஒரு சாதாரண கிராமமான போர்பந்தரிலே பிறந்த மோகனதாஸ் காந்தி இந்தியாவின் ஒப்பற்ற தலைவராகி, மகாத்மாவாகக் காரணம் யாது? அவர் இந்தியாவின் சுதந்திரத்திற்காகத் தன்னை அர்ப்பணித்துக் கொண்டமையே அவரைத் தனிப்பெருந் தலைவராக்கியது. அவரின் அரும்பெரும் சேவைகளே அவரை மகாத்மாவாக்கியது.



ஆங்கிலேயரின் ஆட்யின்கீழ் அடிமைப்பட்டு, அல்லலுற்ற இந்தியாவை தாழ்வுற்று, வறுமை மிஞ்சி, விடுதலை தவறிக் கெட்டுப் பாழ்பட்டுப்போன பாரததேசந் தன்னை; வெள்ளையரின் பிடியில் அகப்பட்டுத் தனது சாதன தர்மத்தையே இழந்திருந்த பழம்பெரும் புண்ணிய பூமியை; சுதந்திர பாரதமாய் மாற்றத் தன் உடல், பொருள், ஆவி, அத்தனையையும் ஆகுதியாக்கினார். இதனாலன்றோ இன்னுங்கூட வெளிநாட்டுச் சிறார்கள் இந்தியா என்றால் அதை காந்தியின் நாடு என்கிறார்கள்.

பரம்பரை பரம்பரையாக; மரபு மரபாக; அந்நியர்கள் வாளெடுத்து இந்தியாமீது போர் தொடுத்த போதெல்லாம்; இந்தியர் பதிலுக்கு வாளெடுத்து அந்நியரைக் கலைத்தார்கள் என்றுதான் வரலாறு காட்டுகிறது. இந்த உண்மையையும், இந்தியாவின் ஆயுத பலத்தையும் கண்ட பிரித்தானிய அரசு புதியதொரு சட்டத்தை உருவாக்கியது. அரசாங்கத்தின் அனுமதியின்றி எவரும் ஆயுதம் வைத்திருக்கக் கூடாது என்பதே அது. இதனால் இந்தியா தன் விடுதலைக்கான ஆயுதத்தையே இழந்தது. விடிவுக்கு வழியின்றி விழித்து நின்றது. இந்த நேரத்திலே தான் அரசியல் வானிலே காந்தி ஓர் துருவ நட்சத்திரமாகத் தோன்றினார். ஆயுதம் இழந்த இந்தியாவுக்குப் புதியதோர் போர்த் தந்திரத்தைக் கற்பித்தார். அதுவே அறப்போர். ஆயுதமின்றி ஆத்மீக அடிப்படையில் வெள்ளையனுக்கெதிராக நடத்திய சத்தியுத்தம். ஒத்துழையாமை, சட்டமறுப்பு என்பன மூலம் ஆட்சியை தம்பிக்க வைத்தல். இப்புதிய போர் பாரெங்கும் கட்டியாண்ட வெள்ளையரை விழிக்க வைத்தது. விடுதலை கொடுப்பதை விட வேறு வழி இல்லை என்ற முடிவுக்கும் வர வைத்தது.

அரசியல் விடுதலை மாத்திரம் பெற்றுக் கொடுப்பது அடிகளின் நோக்கமன்று. ஆன்மீக விடுதலையே அவரின் முக்கிய குறிக்கோளாகும். இந்தியா மதங்களாகவும்

சாதிகளாகவும் பிரிந்து கிடந்தது. அக்காலத்தில் இந்
தியா ஏழ்மையின் கோரப்பிடியில் சிக்கித் தத்தளித்தது.
எனவே இந்தியாவிற்கு விடுதலை வேறு துறைகளிலும்
வேண்டியிருந்தது. அத்துறைகளில் அவர் ஆற்றிய சேவை
கள் தாம் அவரை மகாத்மாவாக உயர்த்தியது

இந்தியாவின் ஏழ்மைச் சொரூபத்தினைக் காந்தியடி
களின் தோற்றத்திலேயே கண்டு கொள்ளலாம். அரை
நிர்வாணப் பக்கிரி என்று அந்நியர் பழிக்கும் நிலைக்கு
அவர் கோலம் இருந்தது. என்றாலும் நாற்பது கோடி
மக்களும் அணியும் அதே உடையைத் தான் நான் அணி
வேன் என்று கூறி மக்களைப் போலவே வாழ்ந்த
மகாத்மா போன்ற ஒப்பற்ற தலைவர் எவருமே இலர்.
அவருடைய அந்நியத் துணி பகிஷ்கரிப்பு இயக்கமும், கத
ராடை இயக்கமும் ஏழை மக்களின் இனிய வாழ்விற்காக
ஆக்கப்பட்டதல்லவா?

இது மட்டுமா? இந்தியாவிலே தாழ்த்தப்பட்டவர்
கள் என்று கூறி, ஒரு சாரரை ஒடுக்கி வைத்தார்கள்.
அவர்களை ஹரிஜனங்கள் என்று அழைத்து, ஹரியின்
மக்களாக்கி, தீண்டாமைக்கு எதிராகப் போராடினார்
காந்தி. இன்று இந்தியாவில் தீண்டாமை ஒழிக்கப்பட்டு
ள்ளதென்றால், இந்தியாவில் இன்று தாழ்த்தப்பட்ட
மக்களும் அரியணையில் அமர்ந்துள்ளார்கள் என்றால்,
அதற்குக் காரணர் காந்தியே.

''அவருடைய ரகுபதி ராகவ ராஜாராம்' என்ற
வணக்கப் பாடலிலே சர்வமதத்தின் சமரசத்தையும்
நாம் காணுகின்றோம். இவ்வண்ணம் இந்தியாவுக்கான
அரசியல் விடுதலையும், சமுதாய விடுதலையும், ஆன்மீக
விடுதலையும் வாங்கித் தந்தவர் மகாத்மா காந்தி. இத
னாலேதான் ''காந்தியின் இந்தியா'' என்ற வார்த்தை
கள் வரலாற்றில் பொன் எழுத்துக்களால் இன்று
பொறிக்கப்பட்டுள்ளன.



த. சிவமணி.
அரசடி ம. வி.
24-4-59
பேச்சு



குறுநடை: மூன்று

## பொன். மேகலா

சத்தியத்தின் ஒப்புயர்வற்ற திருவுருமாக வாழ்ந்து, பாரதத்தின் புகழை ஓங்கச் செய்த, அண்ணல் காந்திக்கு அஞ்சலி செலுத்தும் முகமாக நாம் இங்கு கூடியிருக்கின்றோம். புனிதர், புண்ணியர், புங்கவர், தூயர், துல்லியர் என்றெந்த அடைமொழிகளிலும் அடக்க இயலாத ஓர் அவதார புருடரே மகாத்மா காந்தி. அவர் தம் அஞ்சலியாக நடைபெறும் இவ்விழாவிலே பேசக் கிடைத்தமை என்பாக்கியமே.

பரதகண்டத்திலே உள்ள குஜராத்தி மொழி பேசும் போர்பந்தர் என்னும் ஊரிலே ஆசாரசீலமும், ஆராத இறை பக்தியும் உள்ள வைஷ்ணவ வைசியர் குலத்திலே இற்றைக்கு ஒரு நூறு ஆண்டுகளுக்கு முன்னர், கரம் சந் காந்தி தம்பதிகளுக்குச் சற்புத்திரனாக மோகன் கரம் சந் காந்தி அவர்கள் அவதரித்தார்கள். தம் இளவயதிலேயே இறைபக்தியுள்ளவராகவும் கல்வி கேள்விகளில் விருப்

புடையவராகவுஞ் சிறந்து விளங்கினார். பின்னர் இங்கிலாந்து சென்று சட்டப்படிப்பிலே தேர்ச்சி பெற அவாவினார். அங்கு வாழும் வெள்ளையர் மது அருந்தியும் மாமிசம் உண்டும் களிக்கிறார்கள்; 'இது பாவமானது; நமது ஆசாரத்துக்கு ஒவ்வாதது; அங்கு சென்றால் மகனும் அந்நிய பழக்கங்களுக்கு அடிமையாகி விடுவான்' எனத் தாயார் கவன்றார். அப்பொழுது அவற்றைத் தீண்டமாட்டேனெனக் காந்தி சத்திய வாக்குக் கொடுத்தார். அந்த வாக்குறுதியிலிருந்து அவர் ஒரு தடவைதானுந் தவறிய இல்லை.

இங்கிலாந்திற் கல்வி பயின்ற காந்தி, விடுதலைப் போராட்டக் கலை பயின்றது தென்னாபிரிக்காவில்! அங்கு வாழும் இந்தியர்கள் அடிமைகளாக மிடிமை வாழ்க்கை நடத்தும் கொடுமைகளைக் கண்டு செந்நீர் சொரிந்தார். அவர்களுடைய மனிதகுல உரிமைகளைப் பெற்றுத் தருவதற்கு எத்தனையோ சாத்வீகப் போராட்டங்களை நடத்தினார்.

'விலங்கிடப்பட்டு, பூவும் பொட்டும் இழந்த கோலத்திலே அவதியுறும் பாரத அன்னையின் அடிமைத் தளைகளை உடைத்தெறிந்து, அவள் புன்னகை பூக்கும் பொலிவை என் வாழ்நாளிற் காண்பேன்' என்ற உறுதியுடன் தாய்நாடு திரும்பினார். முஸ்லிம்-இந்து ஒற்றுமையை வலியுறுத்தினார். தீண்டாமையை ஒழிக்கப்பாடுபட்டார். மொழி பலவுடைய பாரத அன்னையைச் சிந்தை ஒன்றுடையவளாக மாற்றினார். வெளிநாட்டுத் துணிப்பகிஷ்காரம், கதர் இயக்கம், உண்ணாவிரதம், உப்புச் சத்தியாக்கிரகம், சாத்வீக மறியல் ஆகிய பல வழிவகைகளால் இந்திய நாட்டின் விடுதலையைத் துரிதப்படுத்தினார்.' இதன் விளைவாகவே, 'சூரியன் அஸ்தமிப்பதேயில்லை' என்று பெருமை பேசிப் பறந்த யூனியன் ஜாக்கொடி இறக்கப்பட்டு, புதிய பாரதத்தின் சதந்திர மூவர்ணக்கொடி பட்டொளி வீசிப் பறக்கலாயிற்று!



காந்தி ஓர் இராச தந்திரியாகவும், சமயத் தொண்டனாகவும், சேனைத் தலைவனாகவும், அரசியல்வாதியாகவும் ஏககாலத்தில் வாழ்ந்தார். 'அரை நிர்வாணப் பக்கிரி' என இழிந்துரைக்கப்பட்ட போதிலும் எளிமை பூண்டு, தூய்மை தாங்கி, 'கைராட்டையே ஆயுதம் கதராடையே சோபிதமாக வாழ்ந்த மனிதருள் மாணிக்கம் அவர்.

காந்திஜி ஓர் இந்து வெறியனின் துப்பாக்கிக்குப் பலியானமை சரித்திரத்தின் பயங்கர சித்திர விசித்திரமாகும். ஆனாலும் நச்சுக்கோப்பையிலே சாவினை அணைத்த சோக்கிறட்டீஸ், சிலுவையிலே மரித்த ஏசு பெருமான் போன்ற மகான்களின் வரிசையிலே மகாத்மா காந்தியும் நித்திய மகாத்மாவானார்.



பொன் மேகலா
ஆனைப்பந்தி பெண்கள் ஆங்கிலப் பாடசாலை
24-4-58
பேச்சு



குறுநடை: நான்கு

## கா. கனகசுந்தரம்

அறப்போரின் ஆற்றலை அகில உலகுக்கும் அறியக் கொடுத்தவர் அண்ணலார் என்று அவனி போற்றும் காந்திஜி அவர்களே. "சத்தியமும் அன்பும் சாகும்வரை மேன்மை தரும்" என்ற சற்போதனையைத் தலைமேற் கொண்டவர் தாரணியேத்தும் காந்தியடிகளே. அன்பும் அகிம்சையும் அனைவர்க்கும் அவசியம் என்பதை அநுபவத்தில் காட்டியவர் பாரதத்தாயின் விடுதலைப்புருஷரே. 'என்கடன் பணி செய்து கிடப்பதே' என்ற குறிக்கோளை ஏற்று நடத்தியவர் எம்மிடைத் தோன்றிய பாபுஜி அவர்களே.

பாரத நாட்டின் மேற்குக்கரையிலே பரந்து கிடப்பது கத்தியவார். கத்தியவாரின் மத்தியிலே கண்ணியம் மிக்க குடும்பத்திலே காந்திஜி பிறந்தார். இற்றைக்கு ஒரு நூறு வருடங்களுக்கு முன்னே எழில்நிறை போர்பந்தரில் அண்ணலார் அவதரித்தார். இராசகோட்டை



இராசனின் இருளகற்றும் அமைச்சராக இலங்கினார் இவரது தந்தை காபா காந்தி. வாய்மையும் நேர்மையும் வாய்க்கப்பெற்ற இவரது தந்தைக்கு வாழ்க்கைத் துணைவியானாள் புத்தளிபாய். புத்தளிபாயின் போதனைத் திறனால் புத்துணர்வடைந்தார் புதல்வர் காந்தி. அன்னையின் கட்டளையை அநுசரித்து அதன்படி நடக்கத் தொடங்கினார். மேல்நாடு சென்று கற்க விழைந்தார். ஆங்கில நாடு சென்று அங்குள்ள கலைகளை அறியவேண்டுமென்று ஆசைப்பட்டார். அன்னை புத்தளிபாயிடம் அவரது விருப்பத்தை அறிய வைத்தார். தாயாரின் தனிவிருப்பை வேண்டி நின்றார் காந்திஜி. பெற்ற பிள்ளையைப் பிறதேசமனுப்ப எந்தத் தாய்தான் விரும்புவாள்? புதல்வரின் ஆசையைப் புந்தியிற் கொண்ட புத்தளிபாயும் புத்திகள் பல புகன்றாள். மது அருந்துதல், மாமிசம் புசித்தல் ஆதியனவற்றை மறுத்து விடும்படி மன்றாடினாள். ஆங்கில நாட்டை அமைவுற அடைந்து, சட்டக் கலையினைச் சரிவரப் பயிலென விடுத்தாளன்னை. நிறத்திலும் பெயரிலும் நீளறிவு தங்கவில்லை என்பதை எடுத்துக்காட்டினார் ஆங்கில நாட்டுக்கு. சட்டக் கல்லூரியிற் சேர்ந்தார், சட்டக் கலையைச் சரிவரப் பயின்றார். புத்தக அறிவையும் புது நண்பர் உறவையும் மெத்தெனக் கொண்டார் மேலை நாட்டினில். ஆங்கில நாட்டில் ஆண்டு பல கழித்தபின் மீண்டார் தம்தாய்நாட்டிற்கு. இராசகோட்டை இராச்சியத்தில் சட்டவல்லுநராகத் திகழ்ந்தார். நீதிக்காக வாதிட்டு நியாயத்தை நிலைநாட்ட விழைந்தார். பின்னர் சேவையின் தேவையே காரணமாகச் சென்றார் தென்னாபிரிக்கா. அங்கு தாய்நாட்டு மக்கள் தன்மானம் இழந்து தயங்கித் திரிவதை ஊனக்கண்ணால் உற்றுநோக்கினார். கூலியென்னும் பெயரால் அவர்கள் கூவப்படுவதை கூர்மையுடன் கேட்டார். கறுத்தவன் என்ற குற்றத்திற்காக கழிக்கப்படும் நிலையினைக் கண்ணாரக் கண்டார். ஆட்சியாளரின் அட்டூழியங்களை அநுபவத்திற் கண்டார். ஈட்டி, வாள், அம்பினால் இவர்களை எதிர்க்க

இயலாது என்பதை இலகுவில் அறிந்தார். துப்பாக்கி கொண்டு தொலைத்தல் பாவம் என்பதையுணர்ந்தார். அகில உலகையும் அடக்கவல்ல ஆயுதத்தை ஏந்தினார். அகிம்சை என்னும் ஆயுதம் கொண்டு அனைவரையும் பணிய வைக்கலாம் என்பதை அகிலத்துக்குக் காட்டினார். சென்ற வேலையைத் திறம்பட முடித்தபின் திரும்பினார் தாய்நாட்டுக்கு. தாய்நாட்டின் தரித்திர நிலையைத் தரைபட்டமாக்க எண்ணினார். தீண்டாமைக்குச் சாவு மணியடிக்கத் திட்டமிட்டார். 'சாதிகள் இல்லையடி பாப்பா' என்னும் பொன்னான வசனத்தில் கருத்தைச் செலுத்தினார். 'பிறப்பொக்கும் எல்லாவுயிர்க்கும் சிறப்பொவ்வா செய் தொழில் வேற்றுமையால்' என்ற செந்நாப் போதகரின் செந்தமிழ் வாக்கை செயற்படுத்த விழைந்தார். 'எல்லாரும் ஓர் குலம் எல்லாரும் ஓரினம் எல்லாரும் இந்நாட்டு மன்னர்' என்னும் ஒப்பற்ற போதனைய ஊர்கள் தோறும் ஊன்றச் செய்தார். நாற்பது கோடிமக்களைக் கொண்ட நாம் நாலுபத்து வெள்ளையரை நாடலாமா? நாட்டின் நலன் கருதி நல்லன செய்ய வேண்டாமா?அந்நியராம் வெள்ளையரின் ஆதிக்கத்தை அகற்றி விட வேண்டாமா? என்பன போன்ற சுலோகங்களை எங்கும் பரப்பினார். எல்லார்க்கும் புகட்டினார். "சொல்லுதல் யார்க்கும் அரியவாம் சொல்லிய வண்ணம் செயல்'' என்ற வள்ளுவர் வாக்கை செயல்படுத்த விரும்பினார். அவுரியின் அநீதியை எதிர்க்க சாம்பரான் சென்றார். 1917ம் ஆண்டு தீன்காடியாவில் வெற்றியடைந்தார். தொழிலாளி வர்க்கத்தாரின் தொல்லைகளைத் தொலைக்கச் சென்றார் ஆமதாபாத். சத்தியாக்கிரகத்தின் தன்மைகளை எடுத்தியம்பினார். தொழிலாளர் சமரசத்துக்காக உண்ணாவிரதம் இருந்தார். உண்ணா நோன்பின் மூன்றாம் நாள் சமரசத்துடன் தவிர்ந்தது தொழிலாளர் தொல்லைகள். பயிர்வரியை முன்னிட்டு வரிகொடா இயக்கத்தை ஆரம்பித்தார். கேதா சத்தியாக்கிரகத்தை தொடங்கினார். ஆட்சியாளரின் அடக்குமுறைக்கு அஞ்சாது அறிஞர்களையும் பெரியார்களையும் அவர்பக்கம்



சேர்த்தார். அறப்போரின் மேன்மையை ஆங்கிலேயருக்குக் காட்டினார். அதிலே வெற்றியும் பெற்றார். இந்து முஸ்லிம் ஒற்றுமைக்காக பாடுபட்டார். பம்பாயில் உப்புவரியை உறுதியுடன் எதிர்த்தார். புத்தகங்களுக்கு விதிக்கப்பட்ட தடையை இல்லாமற் செய்யப் பாடுபட்டார். கதர் உடையே காலத்துக்கேற்றது என்ற குறிக்கோளைக் கொண்டு கைராட்டினத்தைக் கையாளத் தொடங்கினார். அதற்காக அளவற்ற இன்னல்களை அநுபவித்தார். அவர் விரும்பியிருந்தால் கணக்கற்ற செல்வத்தை அடைந்திருக்கலாம். அரசர் போல் வாழ்ந்திருக்கலாம். ஆனால் தன்னலமற்ற அவர் அயலார் ஆட்சியிலிருந்து தம் நாட்டுக்கு விடுதலை பெறும் வேலையில் முனைந்தார். பாரத நாட்டின் விடுதலைக்காக பகர்தற்கரிய அல்லல்களை அநுபவித்தார். அல்லல்கள் அத்தனையும் அடிமைத்தளையை அகற்ற அருந்துணை புரிந்தன. அது காரணமாக 1947ம் ஆண்டு ஆவணித் திங்கள் 15ம் திகதி அடிமை ஆட்சி நீங்கிச் சுதந்திர ஆட்சி மிளிர்ந்தது. சுதந்திரபூமியில் சுதந்திரமாக வாழ வழி வகுத்த அண்ணலை நாதுராம் விநாயக கோட்சே நமனுலகுக்கு அனுப்பி விட்டான். நாட்டின் விடுதலைக்காகத் தம் உடல்பொருள் ஆவி மூன்றையும் அர்ப்பணித்த அகிம்சா மூர்த்தியாம் அண்ணல் காந்தியின் அடிச்சுவட்டைப் பின்பற்றி அவ்வழியில் நடக்க அவனருள் வேண்டி என் பேச்சினை முடித்துக் கொள்கிறேன்.



கா. கனகசுந்தரம்
சிவானந்தா ம. வி.
2-1-58
பேச்சு



குறுநடை: ஐந்து

## ஆர். சோமசுந்தரம்

'அறிவாளிகள் உண்டாக்கப் படுவதில்லை, பிறப்பதொழிய' என்னும் தத்துவார்த்தத்திற்கேற்ப காந்தி மகானும் உலகை நல்வழிப்படுத்தப் பிறந்தார். இந்தியாவிலே போர்பந்தர் சமஸ்தானத்தில் வணிகர் குலத்தில் காபா காந்தி என்பவருக்கும் புத்ளிபாய் என்பவருக்கும் கடைசிப்பிள்ளையாகப் பிறந்தார். மோகனதாஸ் கரம் காந்தி 1869ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 2ந் திகதி குஜராத்தி மாகாணத்தில் போர்பந்தர் என்னும் கிராமத்தில் பிறந்தார். அன்பும், அருளும், தவ ஒழுக்கமும் மிக்கவராகத் திகழ்ந்தார்.

ஆரம்பக் கல்வியைத்தாய் மொழியிலே கற்றுத் தேறி ஆங்கிலப் புலமை பெற இங்கிலாந்து சென்ற காந்தி சட்ட மேதையாகப் பாரதம் திரும்பினார் காந்தி என்றாலே ஒளி, சுடர், தீபம், கதிர் என்று பொருள்படும். காந்தி பெயருக்கேற்ற சீலனாகத் திகழ்ந்தார். பக்குவம்



காணாத சிறு வயதிலேயே கஸ்தூரிபாய் என்னும் சிறுமியை மோகனதாஸ் காந்தி என்ற சிறுவனாகப் பாலியத் திருமணம் செய்து கொண்டார்.

இந்தியாவிலே ஆங்கிலெயரின் அடிமை ஆட்சி கொடி கட்டிப் பறந்து மக்கள் அல்லற்பட்டதைக் கண்ட காந்தி மனம் வருந்தினார். வேதனை மலிந்து கிடக்கும் பாரத நாட்டிற்கு விடுதலை கிடையாதா என்று ஏங்கினார். உடல் உரம் பெற்று, சுதந்திர தாகங் கொண்டு விடுதலை பெறப்பாடுபட்டார். வழக்கறிஞர் தொழில் நடத்த தென்னாபிரிக்கா சென்ற காந்தி அங்கு இந்தியர் அடிமைப்பட்டு கஷ்டப்படும் நிலையைக் கண்டார். அங்கு நாயிலும் கேடாக இந்தியர் மதிக்கப் படுவதைக் கண்டு கொதித்தெழுந்தார். வெள்ளையர் ஆதிக்கமோ தனது பீரங்கிக் கண்களை காந்திக்கு நேராகத் திருப்பின. காந்தியோ பின் வாங்கவில்லை. தளராது போராடி பல்லுடைபட்டு சாச்கடையில் விழுந்து மரணத்தோடு விளையாடினார். அங்கு இந்தியர்களின் அடிமை விலங்கை யகற்றி விடுவித்தார்.

காந்தி அன்பையும், கருணையையும், அருளையும் கொண்டு அகிம்சை வழியில் கத்தியின்றி இரத்தமின்றி போர் செய்தார். காந்தி தனது வாழ்க்கையை நாட்டு மக்களுக்காக அர்ப்பணித்தார். ஆங்கிலேயர் ''அரை நிர்வாணப் பக்கிரி'' என்று கூறி அவமதித்தனர்.

காந்தியின் ஆத்ம பலன் ஆங்கிலேயரின் பீரங்கியைவிட பலம் வாய்ந்ததாக இருந்தது. இந்திய சுதந்திரப் போராட்டத்தில் வெற்றி பெற்றார். ஆண்டு பல கடப்பினும் அன்னாரின் நாமம், என்றும் இவ்வுலகு உள்ளளவும் வாழும். மகாத்துமா வாழ்க.



ஆர். சோமசுந்தரம்
புனித மிக்கேல் கல்லூரி
11-9-57
கட்டுரை



குறுநடை: ஆறு

## த. சதானந்தன்

பரத கண்டத்திலேயுள்ள குஜராத்தி மொழி
பேசும் போர்ப்பந்தர் என்னும் ஊரிலே வைஷ்ணவ
வைஷியர் குலத்திலே கரம் காந்தி தம்பதிகளுக்குச் சற்
புத்திரனாக 1869 ஐப்பசி 2ம் நாள் இவர் பிறந்தார்.
இவர் இளவயதிலே இரக்கமிக்கவராகவும், சமயப்பற்
றுடையவராகவும், விவேகியாகவும், கணப்பொழுதில்
நூல்கள் பல கற்க வல்லவராகவும், ஆண்மையுள்ள
அஞ்சா நெஞ்சம் படைத்தவராகவும் திகழ்ந்தார். எவ்
வித கஷ்டங்களையும் தாங்கும் மனோசக்தியும், நினைத்த
காரியத்தை நிறைவேற்றி வைக்கும் ஆற்றலும் மிக்க
வராகத் திகழ்ந்தார். இவர் கஸ்தூரிபாய் என்னும்
பெண்ணை மணந்து இல்வாழ்க்கையை இனிது நடாத்
தினார். இவர் பார்பான் ஒருவனின் தூண்டுதலால்
இங்கிலாந்து சென்று சட்டப்படிப்புப் படித்துத் தேர்ச்சி
பெற அவாவினார். அந்நாட்டு வெள்ளையர் மதுவருந்தி



யும், மாமிசமுண்டு காலம் கழித்தனர். இதையறிந்த
அன்னையார் தனது மகனும் இதற்கு அடிமையாகி
விடாது சத்தியத்தின் மத்தியில் நல்லன போதித்
தார். இவ்வாக்குறுதியிலிருந்து என்றுமே தவறாது தன்
னைக் காத்துக் கொண்டார். 'அன்னையும் பிதாவும் முன்
னறி தெய்வம்' என்னும் பொய்யா மொழிக்கேற்பத்
தனது வாழ்க்கையை வாழ்ந்து காட்டினார். சுதந்திர தாகங்
கொண்ட அன்னார் இங்கிலாந்தில் வெள்ளையர் மத்தியில்
இந்திய மக்களின் ஏகப்பிரதி நிதியாகச் சென்ற போது
'அரை நிர்வாணப் பக்கிரி' என்று பழித்துரைக்கப்
பட்டார். இருப்பினும் தமக்கே உரிய இனிய சுபாவத்
தாலும், அன்புப் பேச்சாலும் பல குழந்தைகளுடைய
உள்ளங்களையும், நல்லோருடைய உள்ளங்களையும்
கொள்ளை கொண்டார்.

மனித சமுதாயத்தின் மறுமலர்ச்சித் துறைகளுக்
காக வாழ்ந்து புது வழிகள் காண்பித்தார். மனித
தர்மத்தை மையமாகக் கொண்டு, சத்தியம், அகிம்சை,
சமூகநீதி, சமத்துவம் என்பவைகளை அணிகலனாகக்
கொண்டு வாழ்ந்து காட்டினார். அவர் சொல்முறை
மூலம் மட்டுமன்றிச் செயல் முறை மூலமும் நடந்து காட்
டினார். இந்திய சுதந்திரத்திற்கு அகிம்சைப் போர்
தொடுக்கப்பட்டது. இதன் பயனாக அந்நியரின் பிடி
யிலிருந்து 1947 ஆவணி 15இல் யூனியன் கொடி இறக்
கப் பட்டு, புதிய பாரதத்தின் சுதந்திர மூவர்ணக்
கொடி பட்டொளி வீசிப் பறக்கத் தொடங்கியது.

காந்தீய தத்துவத்தைப்பல பிரிவுகளாகக் கூறலாம்.
அவற்றுள் கதர் ஆடையும், தீண்டாமையுமே மதிப்
பற்ற ஆயுதமாகக் கொண்டார். தீண்டாமை இந்து
சமூகத்தின் பெரிய சாபக்கேடு. அவற்றை ஒழிப்பதற்
காக 'மகாத்மா' வாழ்க்கை பூராகவும் பாடுபட்டார்.

அன்பின் திருவுருவாக வாழ்ந்த அண்ணல் அவர்கள் இரத்த வெறி கொண்ட இந்து ஒருவனால் 1948 தை 30ல் அவனுடைய துப்பாக்கிக்குப் பலியானமை சரித்திரத்தில் முக்கிய இடம் பெற்ற நிகழ்ச்சியாகும். அவரின் சூக்கும உடப்பு அழிந்தாலும் அன்னாரின் புகழுடம்பு உலகு உள்ளளவும் நிலைத்து நிற்கும் என்பதில் ஐயமில்லை



த. சதானந்தன்
மெதடிஸ்த மத்திய கல்லூரி
29 - 9 - 57
கட்டுரை



குறுநடை: ஏழு

---

## எஸ். தம்பிராஜா

இந்த நானிலத்திலே எத்தனையோ காந்திகள் இருக்கிறார்கள். இவர்களெல்லாம் பெயரளவில் மாத்திரமே காந்திகள். ஆனால் மகாத்மா என்ற பெரிய அடைமொழி சேர்க்கப்பட்ட மகாத்மா காந்தி ஒருவரே இம் மாநிலத்தில் வாழ்ந்தார். அவரை இன்று நாம் கொண்டாடிவரும் இவ்வருடத்தில் உலகின் பல பாகங்ளிலும் உள்ள மக்களின் மனத்தில் என்றும் நிலை பெற்று வருபவரும் தமது பூத உடம்பைத் துறந்து புகழுடம்போடு நிலவுபவருமாகிய அமரர் மகாத்மா என்றால் மிகையாகாது. கீதையிலே பகவான் கண்ணபரமாத்மா கூறிய 'துட்ட நிக்கிரக சிஷ்டபரிபாலனம்' என்னும் கூற்றை இப்போது நான் உங்களுக்கு ஞாபகமூட்டிக் கொள்கிறேன். 'தர்மம் குன்றி அதர்மம் மேலோங்குகின்ற காலத்திலே அதர்மத்தை வேரோடு களைந்து தர்மத்தை நிலைநாட்ட நான் யுகந் தோறும் அவதாரஞ்

செய்வேன்'' என்று கூறிய அண்ணலின் கூற்றை நாம்
உற்று நோக்கின் அன்று அந்நியராட்சியில் அல்லலுற்றுக்
கிடந்தாள் எமது பாரத அன்னை தனியாட்சி புரிந்த
எமது பாரத அன்னை தன் வயமிழந்தாள், தவமிழந்
தாள், தானமிழந்தாள், எடுப்பார் கைப்பிள்ளையானாள்.
அவள் இன்னல் துடைக்க எவருமே முன்வரவில்லை.
காலங்கள் உருண்டோடின. பாரத அன்னையின் பரிதா
பக் குரல் பரமேஸ்வரன் செவிப்புகுந்தது. இதன் பய
னாகப் பாரத அன்னை இன்புற பம்பாய் மாகாணத்தில்
போர்பந்தர் என்னும் இடத்தில் 1869-ஆம் ஆண்டு ஓர்
இளஞ்சூரியன் அவதாரஞ் செய்தான். இக்குமாரன்தான்
நாம் இன்று கொண்டாடுகின்ற காந்தி மகான். இம்
மகானின் இளமைப்பருவத்திலே நற்குணங்கள் காணப்
பட்டன. முக்கியமாக உண்மை பேசுவதினின்றும் ஒரு
போதும் தவறியதில்லை. தமது குமரப் பருவத்திலே கற்
பின் சிகரமெனப்போற்றும் கஸ்தூரிபாய் என்னும் பெண்
ணைத் தமது வாழ்க்கைத் துணைவியாக்கிக் கொண்டார்.
நியாயவாதி பரீட்சைக்குப் படிக்க இங்கிலாத்து சென்
றார். இங்கிலாந்திலே தமது தாயாருக்குக் கொடுத்த
வாக்குறுதிப்படி மது பானத்தையாவது, மாமிசத்தை
யாவது அருந்திலரல்லர். நியாயவாதியாக இந்தியா
வுக்கு மீண்ட காந்தி தென்னாபிரிக்காவுக்கு வந்தார்.
தென்னாபிரிக்காவிலே இந்தியப் பெருங்குடி மக்கள்
மிருகங்களைக் காட்டிலும் கேவலமானமுறையில் அவ
மதிக்கப்படுவதைக் கண்டு மனம் நெக்குருகினார். பாரத
நாட்டில் மக்கள் எல்லோரும் சமத்துவம் உடையர்கள்
எனவும் இதற்குப் போராடலே தக்கது எனவும் எண்ணி
னார். அடிமை விலங்கறுத்த ஆபிரகாம் லிங்கனைப் போல
வும்; அரண்மனை வாசம், அளவற்ற செல்வம், நற்பண்பு
மிக்க மனைவி குலத்துக்கோர் மைந்தன் என்பவற்றை
யெல்லாம் விட்டு விட்டு அன்பு மார்க்கமே கடவுள்
தன்மை யெனக் கொண்ட புத்த பகவான் போலவும்;
''ஒரு கன்னத்தில் அறைந்தால் மற்றக் கன்னத்தையும்



திருப்பிக் கொடு' என்று கூறிய தேவகுமாரன் யேசு நாதரைப் போலவும்; அவர் தம்மை மாற்றியமைத்துக் கொண்டார். வான் புகழ் கொண்ட வள்ளுவப் பெருந்தகை இவருக்கு உற்ற குருவாகவே அமைந்தார் என்றே கூறவேண்டும். இவ்விருபதாம் நூற்றாண்டிலே வள்ளுவருடைய அறத்தை நிலைபெறச் செய்தமை மகாத்மா காந்தி அடிகளுக்கே உண்டு. அகிம்சையும் சத்தியமும் அவர்து வாழ்க்கையின் இருகால்கள். சத்தியத்துக்கு மேற்பட்ட தெய்வம் வேறில்லை என்று காந்திமகான்தமது சரித்திரத் திற்கு சத்தியசோதனையென்றே பெயர் வைத்துள்ளார். பாரத அன்னையின் அடிமை தளையறுக்க பாரதமக்களிடையே தேசப்பற்று, மொழிப்பற்று, சுதந்திர வேட்கை, அந்நிய நாட்டாரோடு ஒத்துழையாமை தீண்டாமை, கதர், தாய்மொழிமூலம் கல்வி என்னும் அரிய சாதனங்களை அள்ளிப் புகட்டினார். இதன் பயனாகப் பாரத அன்னை கத்தியின்றி இரத்தமின்றி யுத்தமின்றி அடிமை விலங்கு களையப்பட்டாள். 1947-ம் ஆண்டு ஆவணி மாதம் 15-ம் திகதி ஒரு சுதந்திர புருடனை அரவணைத்துக் கொண்டாள். சுருங்கக் கூறின் 1969-ம் ஆண்டு உலக மக்கள் கவனத்தைக் கவர்ந்துகொண்ட ஓர் ஆண்டு. ஏனெனில் உலக மக்களுக்காக நூல் செய்த வள்ளுவப் பெருமான் தோன்றி 2000-ம் ஆண்டு எல்லையை அடைகின்ற வருடம் இதுவே ஆகும். அகிம்சையை உணர்த்திய மாகாத்மாகாந்தியடிகள் இவ்வுலகில் தோன்றி 100-வது ஆண்டு இவ்வாண்டிலே முடிவடைகிறது. எமக்கெல்லாம் ஒரு பெருமை யுண்டென்றால் அது காந்தியுகத்திலே வாழக்கூடிய பெருமைதான்.



எஸ். தம்பிராஜா
வின்சட் மகளிர் உயர்பாடசாலை
24 - 8 - 57
பேச்சு



குறுநடை: எட்டு

## வி. எஸ். சாந்தராஜா

பாரதம் பெற்ற தவப் புதல்வர்களுள் உத்தம உயர் மகனுக 1869 ஒக்டோபர் இரண்டாம் திகதி காந்தி பிறந்தார். இளமையிலே கூச்சமும், பலவீனமுமுள்ளவராகக் காணப்பட்டார். இவர் இளம் வயதிலேயே கட்டாயத் திருமணத்திற்கு ஆளானுர். இவரின் ஈரெட்டு வயதிலேயே தந்தையாகிய கரம் சந் என்பவரை இழந்தார். சட்டப் படிப்புக்காக இங்கிலாந்து சென்ற அண்ணலார், அங்கு இருக்கும் போதே அன்னையையு மிழந்தார். இங்கிலாந்தில் சட்டவல்லுநராகப் பட்டம் பெற்றுத் தாயகந் திரும்பினுர். முதல் வழக்கில் தோல்வி கண்ட காந்தி தான் கற்ற அறிவை மக்களின் நல் வாழ்வுக்காகச் செலவு செய்யச் சந்தர்ப்பத்தை எதிர்நோக்கியவாறு காத்திருந்தார்.

தென்னுபிரிக்காவில் பாரத மக்களின் பரிதாப நிலை கண்டு மனம் உருகினுர். கண்ணீர் சிந்தினுர். நேர்மையுடன் தொழில் புரியும் இவர்களுக்கா இக்கதி என ஏங்கிய அப்பெருந்தகை உரிய இலக்கையடைய அறப்போரில் இறங்கினுர். சட்டமறுப்புக் குற்றத்திற்காக கடுமையாகத் தண்டிக்கப்பட்டார். தொடர்ந்து தனது போராட்டத்தை நடத்தியதால் ஒருவாறு வெற்றி பெற்றுர். இதன் பின் தனது நாற்பத்தேழாம் வயதில் இந்தியா வந்தார். அங்கு காங்கிரஸ் கட்சி நிறுவப் பட்டிருப்பதைக் கண்டார். அங்கு அக்கட்சியின் தலைவராக அவரே தேர்ந்தெடுக்கப்பட்டார். அவர் இந்திய மக்களை அறப்போரில் இறக்கினுர். அகிம்சையையும், சத்தியத்தையும் ஆயுதமாகக் கொண்டார். இந்திய விடுதலை இயக்கத்தில் பங்கு கொண்ட காந்தி பல முறை சிறை வைக்கப்பட்டார். சிறையில் அவர் அடைக்கப்பட்டாலும், அவரின் இயக்கங்கள் யாவும் செயல் பட்டுக் கொண்டே இருந்தன.

ஆங்கிலேயரால் கூட்டப்பட்ட வட்டமேசை மாநாட்டில் அண்ணல் காந்திஜி பங்கு கொண்டு இந்திய மக்களின் சுதந்திரத்திற்காகச் சொற்பொழிவுகள் பல நடத்தினுர். இந்தியா திரும்பிய அண்ணல் காந்தி தனது சாத்வீகப் போராட்டத்தைத் தொடர்ந்து நடத்தினுர். தனது உடல் பொருள் ஆவியனைத்தையும் அர்ப்பணஞ் செய்தார். ஈற்றில்காந்தியின் தத்துவக் கொள்கைப்படி நடந்த இந்திய மக்களுக்குச் சுதந்திரம் கொடுக்க ஆங்கிலேயர் முன் வந்தனர். இந்தியாவின் ஏக தந்தையாக காந்தி கருதப்பட்டார் - மதிக்கப்பட்டார். அரும்பாடு பட்டு இந்திய சுதந்திரத்திற்காகப் பாடுபட்ட அண்ணல் இரத்த வெறி கொண்ட மூர்க்கனெருவனுல் 1948-ம் ஆண்டு தை முப்பதாம் திகதி இவ்வுலகை விட்டும் மறைந்தார்.



டபிள்யூ. எஸ். சாந்தராஜா
புனித மிக்கேல் கல்லூரி
8 - 9 - 57
கட்டுரை



குறுநடை: ஒன்பது

## த. ஜெயவேணி

வணக்கம். உலகில் எத்தனையோ மக்கள் பிறக்கின்றனர் பிறந்து வாழ்ந்த அனைவரையும் உலகம் நினைத்துப் பார்ப்பது இல்லை. எங்கோ சிலரைச் சிலகாலம் எண்ணுவர். ஆனால் எல்லோராலும் எக்காலத்திலும் போற்றப்படுபவர் மிக மிகச் சிலரே. அவ்வாறு காலத்தை வென்று கருத்தை வென்று வாழும் அறத் தலைவர்களுள்ளே தலைசிறந்தவர் அண்ணல் காந்தி.

பாரத நாட்டுமக்கள் பார் இழந்து - படை இழந்து - படைத்த நிதி இழந்து, ஏன், தமக்குள்ள கதியெல்லாமே இழந்து அடிமையானார்கள். பிறப்பால் உயர்வு- தாழ்வும், பெண் அடிமையும் கற்பிக்கப்பட்டன. அகமும், புறமும் அடிமை இருள் சூழ்ந்தது. அநாதைகளானார்கள். சமுதாயமே சீர்குலைந்து கிடந்தது. இந்நிலை இருநூறு வருடங்களாக நீடித்தது.



இந்த இருண்ட வேளையில் பாரத சமுதாயத்திற்கு ஒரு உதய சூரியன் தோன்றிற்று. கதிரவன் என சுற்றி சுற்றி திரிந்தது. கதிரவனுக்கு சுடும் ஒளிமட்டுமே உண்டு. தண்ணிலவு கிடையாது. இந்த ஞாயிறுக்கு சுடும் கதிர் ஒளியும் இருந்தது; தண்ணிலவும் இருந்தது.

நூறுவருடங்களுக்குமுன், காபா காந்திக்கும் புத்லிபாயக்கும் மகனானார். அன்னை மொழியை திண்ணைப் பள்ளியில் பயின்றார். பதிமூன்றும் வயதில் கஸ்தூரிபாய் அம்மையாரை மணந்தார். பின்னர் மது மாமிசம் உண்ணாது, தாய் சொற்கடவாது, இங்கிலாந்துதேசத்திலே சட்டக்கல்வி பயின்றார்.

தாயகம் மீண்டார். தமது தொழிலில் நீதியையும் நேர்மையையும் மேற்கொண்டார். தொழிலுக்காகத் தமது முப்பதாவது வயதில் தென்னாபிரிக்கா சென்றார். அங்கே நிறவெறி தலைவிரித்து ஆடுவதைக் கண்டார். இந்தியர் வெள்ளையரால் ''கூலிகள்'' என அழைக்கப்பட்டனர். விலங்குகள் போன்று நடாத்தப்பட்டனர். இக்கோரக் காட்சிகளைக்கண்டார். கொதித்தது அவர் மனம். இந்திய மக்களின் இன்னல் துடைக்க வீறுகொண்டு எழுந்தார். வெள்ளையனின் நிறத்திமிரை, 'நான்-எனது' என்னும் மமதையை, அறப் போரிட்டு மாய்த்தார். இவருடைய சொல்லை செயலை கண்ணுற்ற வணக்கத்திற்குரிய ஜே. ஜே. டோக் அவர்கள்,

''டால்ஸ்டாயை நினைக்கும் போது ரஸ்க்கினின் எண்ணம் வருகிறது. நெப்போலியனை நினைக்கும் போது லெனினின் எண்ணம் வருகிறது. ஆனால் யேசுவை நினைக்கும்போது காந்தியின் எண்ணந்தான் வருகிறது. யேசுநாதரைச் போலவே வாழ்கிறார். அவர் பேசியதைப் போலவே பேசுகிறார். பூலோகத்தில் பரலோகம் ஏற்படுத்துவதற்காகவே அரும்பாடுபடுகிறார். என்றாவது ஒருநாள் தம் உயிரையே கொடுத்தாலும் கொடுப்பார்'' என அழகாகவும் தீர்க்கதரிசனமாகவும் கூறினார்.

வெற்றிமாலை சூடி தாயகம் மீண்டார். தியாகத்தின் சின்னமாக இம்முறை காட்சி தந்தார். சுதந்திரம் பெறுவதற்கு உரியவர்களாக மக்களைத் தயார் செய்தார். அவருடைய லட்சிய முழக்கம் 'சுதந்திரம் பெற்றே தீருவோம்' என்பது அல்ல, 'சுதந்திரம் அடைந்தே தீருவோம்' என்பதேயாம். செய் அல்லது செத்து மடி என அறப்போர் தொடுத்தார். இப்பாதையில் அவர் அடைந்த இன்னல்கள் எண்ணில் அடங்கா. அடிபட்டார்; உதைபட்டார்; பல் உடைபட்டார்; சிறைச்சாலையில் தள்ளப்பட்டார்.

ஒரு வேளை உணவு கிடையாவிட்டால் நடுக்கம் காண்கிறது நமது உடல். பசிவந்திட பத்தும் பறக்கிறது. ஆனால் இருபத்தொரு நாட்கள் உணவு இல்லை என்றால் இதை மனைவி கண்டும் கேட்டும் இருந்தால் உள்ளம் உடலம் என்ன துடி துடிக்கும் எண்ணிப்பாருங்கள். உணவை ஒறுத்து, உடையை ஒறுத்து, ஊருக்கு உழைத்தார். உள்ளும் புறமும் ஒளி பெற்றார். ஒளியின் முன் தாக்குப்பிடிக்க மாட்டாது அடிமை கொண்ட இருள் அகன்றது. வெள்ளையன் ஆட்சி வீழ்ந்தது. மணிக்கொடி பறந்தது.

பக்கீர், பத்தாம்பசலி, வாழத்தெரியாதவன் என்று அன்று தூற்றப்பட்ட இவர் வரலாறே கண்டிராத சாதனையை நிலைநாட்டினார்.

அரசியல் வானில் இருளை அகற்றிய ஒளி சமுதாய வாழ்விலும் இருளை அகற்றத்துடியாய் துடித்தது. கைராட்டினம் தந்தார். கதர் அடை தந்தார். வள்ளுவன் வழி வாழ்ந்தார்.


ராமநாம பஜனைக்கு வந்தார். அடியார் மத்தியில் கரங் குவித்து நின்றார்! ஹே! ராமா! என அபயக் குரல்கொடுக்க, பறித்தார்கள் அந்த உத்தமரின் உயிரை.

கருத்தில் அகிம்சையும் கையில் தடியும் ஊன்றி நடந்த எழில் உருவாகக் காட்சி தந்தார் கோடானு கோடி மக்கள் இதயக் கோயில்களில் குடிகொண்டார்



வெளி அதிகாரத்தால் ஆதரவு எதுவும் இன்றி மக்களுக்குத் தலைவராக வந்தார். சூதுவாதுகளும் தந்திரங்களும் இன்றி தம்முடைய சொந்த சக்தியையே துணையாகக் கொண்டு அரசியலில் வெற்றி கண்டார். பலாத்காரத்தை புறக்கணித்த வீரன். விவேகமும் தன்னடக்கமும் மிக்கவர். மக்களின் நலனுக்காக தம் சக்தி முழுவதையும் அர்ப்பணம் செய்தார்.

அன்பே தகழியாகவும், அகிம்சையே நெய்யாகவும், என்பு உருகு தியாகமே இடு தீயாகவும் கொண்ட அழியாத சத்திய விளக்கினை ஏற்றிச் சென்றார். இந்த ஒளியிலே வேறுபாடற்ற, ஒற்றுமை பூக்கும் அன்பு தழுவிய ஓர் உலகு சமைப்போம வாரீர். சத்தியமே ஜெயம்.



த. ஜெயவேணி
கோட்டமுனை ம. வி.
26-2-56
பேச்சு



குறுநடை: பத்து

## தி. காஞ்சனா

மகாத்மா காந்தி ஒரு பெரிய அரசியல் சீர்திருத்த
வாதி. அவர் உலகத் தலைவர்களுட் பெருந்தலைவர். இந்
திய விடுதலை இயக்கச் சிற்பி. உண்மையே சத்தியம் சத்
தியத்தின் வழியே சமதர்மம் என்னும் உயர்ந்த கொள்
கையுடன், தாயிடம் கொடுத்த சத்தியத்தை தனது இங்
கிலாந்து வாழ்க்கையில் இம்மியேனும் பிசகாமல் காத்த
உத்தமன். உண்மைக்கு உயர்விடம் அளிக்க உறுதியுடன்
தனது வாழ்க்கையை எவ்வாறு நடாத்திச் சென்றார்
என்பதற்கோர் உதாரணம். சிறு பையனாக இருக்கும்
போது, வகுப்பறையில் மேலதிகாரி ஒருவரால் நடாத்
தப்பட்ட பரீட்சையில், தான் விட்ட பிழையை வகுப்பாசி
யர் சுட்டிக்காட்டியும், பக்கத்திலுள்ள சகமாணவனின்
கொப்பி பார்த்து எழுத வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்ட
போதிலும் இது சத்தியத்திற்கு மாற்றமானதென்ற உறு
தியுடன் தன் வழி சிறந்ததென சும்மாயிருந்து விட்டார்.




தன்வழி தர்மவழி என்று செயல்பட்ட காந்திக்கும் பல சந்தர்ப்பங்களில் தர்மசங்கடமான நிகழ்வுகள் காத்திருந்தன. இவர் உயர்நிலைப்பள்ளியொன்றில் கல்வி கற்கும்போது நேரம் பிந்திச் சென்றமைக்காக, அவர் உண்மையே கூறினாலும், ஒரு அணா தண்டம் கட்ட வேண்டிய நிலைக்கு ஆளானார். இதை நினைத்து அவர் மிக வருத்தப்பட்டார். அன்றுமுதல் உண்மை பேசும் ஒருவன் எப்போதும் எச்சரிக்கையாகவும் இருக்க வேண்டும் என்ற முடிவுக்கு வந்தார்.

இங்கிலாந்திலே அன்னார் வழிதவற வேண்டிய பல சந்தர்ப்பங்கள் ஏற்பட்ட போதிலும், அன்னையிடம் கொடுத்த சத்தியம் அனைத்திலிருந்தும் காத்தது. தான் அனுபவிக்க வேண்டிய இச்சைகள் அனைத்தும் மனத்திலிருந்ததே தவிர செயலில் இருக்கவில்லை. இது அவரது வாழ்க்கை பூராவும் ஒளி மயமாகக் காட்சி கொடுத்தது.

ஆபிரிக்காவில் வாழ்ந்த காலத்தில் ''கூலிகள் தலைப்பாகை கட்டக்கூடாது'' என்று வெள்ளையர் இட்ட கட்டளைகளை மதியாது அவர்களின் அடி, உதை அனைத்தையும் பொருட்படுத்தாது, ''தலைப் பாகையே வேற்று நாட்டிலிருக்கும் ஓர் இந்தியனின் சின்னம்'' என்று அஞ்சாமல் கூறிய பெருமையும் அன்னாரையே சாரும். இந்தியர்கள் யாரும் பாதையில் நடப்பதைக் கண்டால், அவர்களைப் பிடித்து உரிய தண்டனை விதிக்க வேண்டும் என்ற சட்டம் இருந்தது. இதையறியாத காந்தி வழிபாதையில் நடந்து செல்லும்போது பொலிஸ்காரர் ஒருவரால் நையப் புடைக்கப்பட்டார். இதையறிந்த ஆங்கிலேய நண்பன் வழக்குத் தொடருமாறு கூறினார். அதற்கு மகாத்மா 'நான் மன்னித்துவிட்டேன்' எனக் கூறினார். இதைக்கேட்ட அப்பொலிஸ்காரன் வெட்கப்பட்டது மட்டுமன்றி மன்னிப்பும் கேட்டான்.

அகிம்சாமுறையில் அவர் நடாத்திச்சென்ற சமதர்ம முறையை உலகமே புகழ்கின்றது. அன்னார் தனக்காக மட்டும் வாழாது உலகமக்களுக்காக, குறிப்பாக இந்திய மக்களின் சுதந்திரத்திற்காக வாழ்ந்தார். அன்னார் காட்டிய பாதையிலே நாமும் நடந்து அவரது வாழ்க்கையைப்போன்று நமது வாழ்க்கையும் பெருமை தரக்கூடியதாக அமைக்க முயல்வோமாக.



தி. காஞ்சனா
ஆனைப்பந்தி பெண்கள் ஆங்கில பாடசாலை
16 - 1 - 56
கட்டுரை



குறுநடை: பதினொன்று

## கே. சஞ்சீவரத்தினம்

உலகிலே தோன்றிய உத்தம மகா புருஷர்களுள் மகாத்மா முக்கியத்துவமும் சிறப்பும் வாய்ந்தவர். இவர் இந்தியாவிலுள்ள பம்பாய் மாகாணத்தில் போர்பந்தர் என்னும் இடத்தில் 1869ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 2ம் திகதி அவதரித்தார். இவரது அன்புத்தந்தையார் கூபாகாந்தி அவர்களாவர். அவரது அன்னையார் புத்தளி பாய் எனும் மாதரசி. இவரது இளமைப் பெயர் மோகனதாஸ்காந்தி. இவரைச் சிறுவயதில் யாவரும் மோனியா என அன்பு ததும்ப அழைப்பர். இவர் சிறு வயதிலேயே பொய் பேசுதல், பிறருக்குத் துன்பம் செய்தல், போன்ற கெட்ட செயல்களை வெறுத்தார். அதற்கு உதாரணம்: ஒரு நாள் அவர் தனது தமையனாருடன் விளையாடிக் கொண்டிருந்தபோது, தமையனார் காந்தியை அடித்து விட்டார். அவர் அழுது கொண்டு தனது தாயாரிடம் சென்று முறையிட்டார் அவரது அன்னையார் 'திரும்பித்

தமையனை ஏன் அடிக்கவில்லை' எனக் கேட்டார். அதற்கு
அவர் 'அடித்தவரை திருப்பியடிக்க என்றால் முடியாது'
எனக் கூறிவிட்டார். சிறுவயதிலிருந்தே மிகுந்த புத்தி
கூர்மையுடையவர். யாருடனும் அதிகமாய்ச் சிநேகிதம்
கொள்ளமாட்டார். ஆனால் யாருடனும் பகைத்துக்
கொண்டதும் கிடையாது. எல்லோரிடமும் சமமாகப்
பழகுவார். உயர்ந்தோர் தாழ்ந்தோர் என்னும் பேத
மின்றி பழகுவதில் இவருக்குத் தனி இன்பம். இவர் பொய்
களவு செய்வதில்லை. ஆயினும் சந்தர்ப்ப வசத்தால்
அவ்வாறு செய்ய நேரிட்டால் அவரது தவறையுணர்ந்து
அதற்கு மன்னிப்புக் கேட்டுக்கொள்ள இவர் என்றும்
பின்வாங்கியதோ, தவறியதோ கிடையாது. அதற்கு
உதாரணம் ஒரு தடவைதான் நிகழ்ந்தது. அவர் தான்
அணிந்திருந்த தங்கக் காப்பில் ஒரு துண்டை நறுக்கி
விற்று விட்டார். வேறு வழியின்றியே அவ்வாறு செய்
தார். ஆனால் இந்தத் தவறு அவருடைய மனத்தை உறுத்
தியது. அதற்குத் தன் தந்தையாரிடம் மன்னிப்புக் கேட்
கத் தீர்மானித்தார். ஆனால் பயம் பீடித்துக் கொண்டது

என்ன செய்வது எனத் தெரியாமல் இருந்தபோது
ஒரு முடிவைக் கண்டறிந்தார். அதாவது தன்னுடைய
தவறுகளை யெல்லாம் ஒரு துண்டில் எழுதி தனது தந்தை
யாரிடம் கொடுத்துவிட்டு நடுங்கிக் கொண்டு மூலையில்
நின்றார். ஆனால் அவரது தந்தையார் அவரைஅடிக்க
வில்லை. பதிலுக்கு காந்தியாரின் தந்தையார் கண்ணீர்
வடித்தார். அப்போது காந்தி ஆறாத்துயரில் மூழ்கினார்.
இவருக்கு இளவயதிலேயே திருமணமாகிவிட்டது. இவ
ரது மனைவி கஸ்தூரிபாய் என்னும் பெண். இவர் வளர்ந்
ததும் பரீஸ்டர் படிப்புக்காக இங்கிலாந்து சென்றார்.
அப்போதும் அவர் தனது தாய்க்கு கொடுத்த சத்திய
வாக்கின்படி மதுவையோ, மாமிசத்தையோ ஒரு நாளே
னும் ஏறெடுத்துப் பார்ப்பதில்லை. எப்போதும் ஒரே



மாதிரியாகவே சத்தியப் பாதையினின்றும் தவறாது
வாழ்ந்தார். மனிதன் தெய்வமாகலாம் என்பதை நிரூ
பித்துக் காட்டிய மகாமேதை. இவர் இருந்திருக்கா விட்
டால் இந்தியப் பிரஜைகள் இன்று வாழ்க்கை என்ற
வானில் சுதந்திரப் பறவைகளாகச் சிறகடித்துப் பறக்க
முடியாமல் போயிருக்கும்; அவரது அரிய ஒப்பற்ற
சேவையே இந்திய நாட்டுக்குச் சுதந்திரம் பெற்றுத்
தந்தது.

பிரித்தானியரிடம் அடிமைகளாய்க் கிடந்த இந்தி
யர்களைக் காண இவரது இரத்தம் கொதித்தது. பாரத
மாதாவின் அருந்தவப் புதல்வனான மகாத்மா தன் சகோ
தரர்கள் அடிமைத் தளைகளில் சிக்கித் தவிப்பதை இவரால்
எப்படி ஏற்றுக்கொள்ள முடியும்? ஆகையினால் சுதந்திரம்
என்னும் அருமருந்தைத் தேடியலைந்தார். அது இலகுவில்
கிடைக்கக் கூடியதா? இதற்காக இவரும் இவரது மனைவி
யும் பல முறை சிறை என்னும் நரகத்துக்குப் போக
நேர்ந்தது. ஆயினும் புன்முறுவல் பூத்த முகத்துடன்
இவர்கள் அதை ஏற்றுக் கொண்டனர். இவர் பாரத
சுதந்திரத்திற்குப் பட்ட துன்பங்கள் எழுத்திலடங்கா.

தீண்டாதாரிடம் இவருக்கிருந்த அன்பு எல்லை அற்றது.
இவர் ஓர்கருணைக்கடல், அன்புப்பிழம்பு, இரக்கமே உரு
வான ஓர் அன்புருவம். இவரது குறிக்கோள்கள் எப்
போதும் நல்வழிகளிலேதான் தங்கியிருந்தன. கடைசி
யில் முயற்சி யுடையார் இகழ்ச்சியடையார் என்பதற்
கிணங்க சுதந்திரம் பெற்றுக் கொடுத்தார்.



கே. சஞ்சீவரத்தினம்
வந்தாறுமூலை ம. ம. வி.
3 - 10 - 55
கட்டுரை



குறுநடை: பன்னிரண்டு

## த. விஜயகுமாரி

தலைவர் அவர்களே! மதிப்புக்குரிய நடுநிலைமையாளர்களே! மற்றும் பெரியோர்களே! மாணவ மாணவிகளே உங்கள் அனைவருக்கும், எனது அன்பு கனிந்த வணக்கம் உரித்தாகுக. நான் உங்கள் முன்னிலையிற் பேச எடுத்துக் கொண்ட விடயம் காந்தீய தத்துவத்தின் மூன்று அம்சங்கள்.

இன்று நாம் காந்தியுகத்தில் வாழ்கின்றோம் என்று கூறினால், அக்கூற்று மிகையாகாது. 1969 ஆம் ஆண்டு உலக மக்களைக் கவர்ந்துள்ளதோர் ஆண்டு. ஏனெனில், உலக மக்களுக்காக நூல் செய்த வள்ளுவன் தோன்றி இரண்டாயிரமாண்டு எல்லை அடைகின்ற வருடமும் இவ் வருடமேயாம். அன்றியும் பாரத அன்னைக்குக் கத்தியின்றி இரத்தமின்றி யுத்தமின்றி சுதந்திரத்தைப் பெற்றுக் கொடுத்ததன் மூலம் உலகிற்கு அகிம்சையை உணர்த்திய மகான்



காந்தியடிகள் இப்பூவுலகிலே தோன்றி நூறாவது ஆண்டு எல்லை அடைகின்ற வருடமும் இவ்வருடமேயாகும். இதனாலே இதனைக் காந்தியுகம் எனக் கூறலாம். காந்தீய தத்துவங்கள் இவ்வுலகிற்குப் புதுமையானது. இதுவரையுந் தோன்றாதது. புராணங்களிலாவது இதிகாசங்களிலாவது காணமுடியாதது.

அன்று அரக்கர் சேனையை அடியோடு அழிக்க இராமபிரான் தோன்றினார். 'துஷ்ட நிக்கிரக சிஷ்ட பரிபாலனம்' செய்யவே கண்ணபிரான் அவதாரம் செய்தார். முருகப் பெருமான் அவதாரமும் சூரசங்காரமே. ஆனால் மகான் காந்தியடிகளின் அவதாரமோ மிகப் புதுமையானது. பகைவர்களை அழிப்பதன்று. பகைவர்கட்கு இரங்குவது. அருளுவது. இன்னா செய்தார்க்கு இனியதே செய்வது. இதனாலேதான் காந்தீய தத்துவங்கள் மிகப் புதுமையானதும் மிக உயர்ந்ததென்றும் நாம் கருதுகின்றோம். சோதனை, போதனை, சாதனை ஆகிய முப்படிகளிலும் தம்மையுருவாக்கிய காந்தி மகான் மன்னர்களை மதிக்கவில்லை. பணக்காரர்களைத் துதிக்கவில்லை. ஏழை எளியவர்களைப் பற்றியே சிந்தித்தார். இதற்காகப் பாரத மக்களிடையே தேசப்பற்று, மொழிப்பற்று, சுதந்திர வேட்கை, அஞ்சாமை, அகிம்சை, ஒத்துழையாமை, கதர், கல்வி, தீண்டாமை என்று இன்னோரன்ன தத்துவங்களைப் போதனையிலும் சாதனையிலும் நிலையுறுத்தினார்.

இவற்றிலே நான் எடுத்துக் கொண்ட அம்சங்கள் ஒன்று மொழிப்பற்று; இரண்டு கதர்; மூன்று தீண்டாமை. ஆங்கில ஆட்சியை அடியோடு களைய வேண்டும் என்று விரும்பிய காந்தி மகான் ஆங்கில மொழியின் முக்கியத்துவத்தைக் குறைக்க வேண்டுமென விரும்பினார். ஆங்கிலக் கல்வி காரணமாக நாம் பேடிகள் ஆகிவிட்டோம். நமது அறிவு குன்றி விட்டது. இந்தியாவைப்

பாதிக்கின்ற மூட நம்பிக்கைகள் அநேகம். சுதந்திர உணர்ச்சியை ஊட்டுவதற்கும், கூர்மையான அறிவை அபிவிருத்தி செய்வதற்கும் ஆங்கிலக் கல்வி அவசியமென நாம் எண்ணிக் கொண்டிருக்கிறோமே அதுதான் யாவற்றையும் விடப்பெரிய மூடநம்பிக்கை. 'அந்நிய ஆட்சியாளர் நமது இளைஞர்களை இழிந்த நிலை அடையச் செய்ய வேண்டும் என்ற நோக்குடன் ஆங்கிலக் கல்வி படிக்கச் செய்கின்றார்கள். ஆங்கில மோகம் இருக்கும் வரையும் நாம் அடிமைகளாகவே வாழ நேரிடும். வடக்கே சிறிநகரிலிருந்து கிழக்கே திக்குகால் வரையும் பரந்துள்ள இந்தியாவை ஒன்றுசேர்க்க சிறிது நேரம் மனத்தால் சிந்தித்துப் பாருங்கள். அப்படிச் சிந்திக்கும்போது பெரும்பான்மை இந்தியரின் தாய் மொழியான இந்தி மொழி எவ்வளவு அவசிய மென நீங்கள் உணர்ந்து கொள்வீர்கள், என்று இன்னோரன்ன பலவிதமான போதனைகளால் பாரத மக்களிடையே மொழிப் பற்றையும் தேசப்பற்றையும் தட்டியெழுப்பிய பெருமை மகான் காந்தியடிகளையே சாரும்.

காந்தியடிகள் கையாண்ட பொருளாதாரச் சித்தாந்தமே கதர். பொருளாதாரப் புலிகள் கதரைக் கண்டு எள்ளி நகையாடலாம். ஆனால், ஒரு வேளை உணவிற்கு வழியற்றுத் தவிக்கும் மக்களுக்கு உணவளிப்பதுதான் கதர். ஒரு முழக் கதர் வாங்கியதன் மூலம் ஒரு குடும்பத்திற்கு உணவளித்த பெருமை காந்தியடிகளையே சாரும். இந்தியாவில் வந்திறங்கும் அந்நிய துணி ஒவ்வொரு யாரும் என்ன செய்கின்றது? பாவம் பசியால் மெலிந்து வாழும் ஏழை மக்களின் உணவின் ஒரு கவளத்தைப் பறித்துக் கொண்டுபோய் விடுகிறது. எனவே எமது தாய் நாட்டிலே காணப்படுகின்ற வறுமையை ஓட்டியொழித்து, பசியால் மெலிந்து வாழும் மக்கள் ஆனந்தத்தோடும் உற்சாகத்தோடும் உணவைப் பெறும் வழியை நிலைநாட்ட நூல் நூற்பதையும் கதர் ஆடை



அணிவதையும் தவிர வேறு சிறந்த வழி எனக்குத் தெரியவில்லை, எனப் போதனையில் கூறியது மட்டுமல்லாமல் அதனைச் சாதனையிலும் நிலைநிறுத்திய பெருமை காந்தியடிகளையே சாரும்.

அடுத்த அம்சம் தீண்டாமை. தீண்டாதவர்கள் நாயிலும் கடையராகத் தள்ளி ஒதுக்கப்பட்ட காலம்; இக் கேவலமான நிலையைக் கண்ட காந்தியடிகள் இதனை ஒழித்துக் கட்டுவதற்குக் கையாண்ட கைங்கரியங்களோ எண்ணிறைந்தன. தீண்டாதவர்களுக்குத் தனித்தொகுதி கொடுக்க வேண்டுமென்பது நவீன பைசாச அரசாங்கத்தின் சிருட்டி எனக் கூறிய மகான், தீண்டாமை என்பது நுட்பமான பல ரூபங்களிலே இந்திய மக்களைப் பிரித்து வைத்திருப்பதாகவும், இதனாலே அவர்களுடைய வாழ்க்கை இன்பமற்றதாக இருந்து வருகின்றது, என்று கூறியது மட்டுமல்லாம் அந்த மாசினைத் துடைக்க அரும்பாடுபட்டுழைத்தார்.

“மாணவர்களே, அரிசனங்களை உங்களுடன் பிறந்த சகோதரர்களாக நடத்துதல் வேண்டும். அவர்களுடன் அன்போடுபேச வேண்டும். விடுமுறைகாலங்களை நல்ல முறையில் செலவிட விரும்பினால் மாணவராகிய நீங்கள் அநேக காரியங்களைச் செய்யலாம். நல்லதொரு பாடத்திட்டம் போட்டு விடுமுறை கழியும் வரையும் இரவும் பகலும் சிறிது நேரமாவது அரிசனங்களுக்குப் பாடம் சொல்லிக் கொடுங்கள். அரிசனங்கள் வசிக்கும் இல்லங்களைப் பெருக்கிச் சுத்தம் செய்து கொடுங்கள். அரிசனங்கள் சுத்தம் செய்ய விரும்பினால் அவர்களையும் சேர்த்துக் கொள்ளுங்கள். அரிசனப் பிள்ளைகளின் உடம்பிலே காணும் அழுக்குகளைப் போக்க அவர்களைக் குளிப்பாட்டுங்கள். வயது வந்தவர்களுக்கும் சிறுவர்களுக்கும் சுகாதார சம்பந்தமான பாடங்களைச் சொல்லிக் கொடுங்கள்.”

நோய்வாய்ப் பட்டிருக்கும் அரிசனங்களுக்கு உதவி செய்யுங்கள். அல்லாமலும் தீண்டாமை விலக்கு சம்பந்தமான செய்தியை உயர்ந்தசாதி இந்துக்களிடையே பரப்புங்கள்' என்று இன்னோரன்ன புத்திமதிகளைக் கூறியதோடு மட்டுமல்லாமல், அவர்தானும் இவற்றைப் போதனையிலும் சாதனையிலும் செய்து முடித்து, தீண்டாமை என்னும் நோய்க்கு ஓரளவு சாவுமணியடித்த பெருமை மகான் காந்தியடிகளையே சாரும். இவ்வாறு காந்தீயத் தத்துவங்கள் அனைத்தையும் நாம் ஆராய்ந்து பார்க்குமிடத்து அவர் ஓர் அவதார புருடர் என்பது நன்கு புலப்படும்.

எனவே மக்களாகிய நாம் பேரின்பம் பெறும் பயனைப் பெற வேண்டுமானால், காந்திஜி அவர்களை எமது வாழ்க்கைக்கு வழிகாட்டியாக அமைத்துக் கொள்ள வேண்டும்.




ரி. விஜயகுமாரி
கோட்டமுனை ம. வி.
24 - 4 - 55
பேச்சு




குறுநடை: பதின்மூன்று

## வி. யோகராசா

இன்று ஆண்டுகள் நூறாகிவிட்டன. அன்று குருதேவர் ரவீந்திரர் கண்டு சொன்ன அந்த மகாத்மா மண்ணிலே தோன்றி வருடங்கள் நூறாகிவிட்டன! எத்தனை ஆயிரம் வருடங்களுக்கு ஒருவராகத் தோன்றும் உலகப் பெரியார்களுள் புத்தருக்குப்பின் தோன்றிய புனிதராகக் கருதப்படும் உத்தமன் காந்தி அடிகளை உலகம் என்றுமே மறந்து வாழவும் முடியாது வாழவும் மாட்டாது.

காந்தியடிகளின் படத்தைப் பார்த்தாலும் நமக்கொரு வித புத்துணர்ச்சி உண்டாகிறது. அவருடைய கண்கள் வாழ்க்கையின் அந்தகாரத்திலுள்ள இரகசியங்களைத் தேடுவனபோல் இருக்கின்றன. அவருடைய அகன்றகாதுகள் அவரிடத்திலிருக்கும் இனிய சுபாவத்தைத் தெரிவிக்கின்றன. நம்முடைய காலத்தில் வேறெந்த மகானும் காந்தியடிகளைப் போல அன்பினுடைய சக்தியை விளக்கிக் காட்டவில்லை. அவர் உபதே

சிக்கின்ற அன்பு கீழ்த்தரமான அன்பல்ல. கிறிஸ்தவ
ஞானிகளும் இந்து ஞானிகளும் உபதேசித்துச் சென்ற
அன்பு. காந்தி மகானுடைய அறிவு அடிக்கடி மோட்ச
லோகத்தைத் திருப்பிப் பார்க்கின்றதேயாயினும், அவ
ருடைய இருதயம் எப்பொழுதுமே நிதானமானதாகவும்,
கருணை நிறைந்ததாகவும், கௌரவம் வாய்ந்ததாகவும்
இருக்கின்றது. காந்தியவர்கள் தமது சுயகாரியத்திலே
ஆத்மா தெளிவடையத் தாம் வெகு பிரயத்தனப்பட்டி
ருப்பதாகக் கூறுகிறார். பல பிரச்சனைகளுக்கு மத்தியில்
அவர் வாழ்ந்தார். ''தாய்க்குக் கொடுத்த சத்தியத்
தைக் கடைப்பிடிப்பதா?'' என்ற பிரச்சனைகளுக்கிடையே
அவர் இங்கிலாந்தில் அல்லற்பட்டார். இறுதியில் எத்த
கைய துன்பம் வந்தாலும் சத்தியத்தைப் பாதுகாப்பது
என்ற முடிவுக்கு வந்தார். சத்தியத்தில் அவர் கொண்
டிருந்த அசையாத நம்பிக்கையை 'சத்தியமே கடவுள்'
என்று அடிக்கடி அவர் சொல்லுவதிலிருந்து அறிய
லாம். தென்னாபிரிக்காவில் அவர் வாழ்ந்தமையே
அவரை மகாத்மா வாக்கியது. தென்னாபிரிக்காவில்
அவர் வாழ்ந்த காலத்தில் துன்புறுத்தப்பட்டார். அச்சு
றுத்தப்பட்டார். ஆனாலும் இவற்றிற்காக அவர் மனக்
கசப்புக் கொள்ளவில்லை. அதற்குப் பதிலாக அகிம்சை
வழியில் உறுதியுடன் சென்றுகொண்டிருந்தார். அவர்
உலகத்தின் புகழ்ச்சிகளையும் இகழ்ச்சிகளையும் பொருட்
படுத்தவில்லை. சொந்த உறவினர் போல தீண்டா
தாரை மதித்து அவர்களுக்கு சேவை செய்து கொண்டி
ருந்தார். மேல்நாட்டு அறிஞர்களிடத்தில் காணப்படும்
கர்வம் அவரிடமில்லை. உண்மை என்று அவருக்குப்படும்
பட்சத்தில் அந்த அபிப்பிராயத்தை மாற்றிக்கொள்ள
அவர் பின்நிற்கமாட்டார். அவர் இலட்சியவாதியாக
இருந்தாலும் உலக ஞானம் நிரம்ப உடையவர். இந்த
அனுபவ ஞானமும் சுயநலப்பற்றின்மையும் சேர்ந்து
அவருக்கு எதனையும் சமாளிக்கக் கூடிய ஆற்றலை அளித்
திருக்கிறது. அவர் எங்கு சென்றாலும் அவருக்கு எல்



லாம் கட்டுப்பட்டு விடுகின்றன. தென்னாபிரிக்காவில்
பிளேக் நோய் பரவியிருந்த காலத்தில் காந்தியடிகள்
ஒப்பற்ற சேவை செய்தார். இந்தப் பிரபஞ்ச சாம்ராச்
சியத்தின்மீது எனக்கு இச்சையில்லை. மோட்ச சாம்ராச்
சியத்திற்காகவே நான் முயற்சி செய்து கொண்டி
ருக்கிறேன். அப்படி முயலுவதானது ஆத்மாத்தமான
விடுதலை பெறுவதாகும். என்னைப் பொறுத்தமட்டில் முத்
திக்கு வழி எங்கிருக்கின்றதென்றால், எனது தேசத்துக்
காகவும், மானிட ஜாதிக்காகவும் ஓயாமல் தொண்டு
செய்து கொண்டிருப்பதிலேதான். கீதையிலே கூறப்பட்
டிருக்கின்ற மாதிரி சிநேகிதனுடனும், சத்துருவுடனும்
நான் சமாதானமாக வாழ விரும்புகின்றேன்' என்று
காந்தியடிகள் கூறியிருக்கின்றார்கள். மகாத்மா மதத்
தையும், அரசியலையும் ஒன்றாக இணைத்த கர்மயோகி.
மதம் என்கின்ற அத்திவாரத்தில் கட்டுப்படாத எந்த
அரசியல் கட்டிடமும் நிலைக்காது. மதமில்லாத அரசி
யல் மரணப் பொறிதான் என்று மதமில்லாத [அரசிய
லை ஆணித்தரமாகக் கண்டிக்கின்றார். காந்தி மகான்
மக்கள் அனைவரும் சுய மதிப்புணர்ச்சியோடு வாழ
வேண்டுமென்று விரும்பினார். இதற்காக அவர் நடத்திய
போராட்டங்கள் அனைத்தும் சத்தியத்தையும் அன்பை
யும் அடிப்படையாகக் கொண்டிருந்தன. அன்னியர்
களைத் தொலைக்க வழி சாத்வீக எதிர்ப்புத்தான் என்று
கூறினார். பின்னும் அவர் சாத்வீக எதிர்ப்பு என்பது ஒரு
தரும ஆயுதம் என்கிறார். இந்த சாத்வீக எதிர்ப்பால்
உலகத்திற் சிறந்த வல்லரசாகிய பிரித்தானிய சாம்ராச்
சியத்தை முறியடித்து வெற்றி கண்டார். பழைய இலக்
கியங்களில் எதைக் காண்கின்றோம்? நல்லவர்கள் வாழ்
வார்கள் தீயவர்கள் அழிவார்கள் என்றல்லவா காண்
கின்றோம். இராவணனை அழிக்க இராமரின் அவதாரம்.
சூரனை அழிக்க முருகனின் அவதாரம். பாரத யுத்தத்
தில் எதிரிகள் படாதபாடுபட்டனர். அவர்கள் தலைகள்
உருண்டோடின. இரத்தவெள்ளம் கரைகாணாத வெள்

ளம். தருமர் பொறுமையின் சிகரம். சத்தியத்தின் ஆணி வேர். அவரும் போர்க்கருவிகள் தாங்கிப் போர் புரிந்தார். ஆனல் காத்தியடிகளின் சித்தாந்தம் இதுவல்ல. எதிரிகளை அழிப்பதற்கு பதிலாக, எதிரிகளின் மனத்தை மாற்றி அவர்களைத் தூய்மை செய்வது, தின்னவரும் புலியைத் திருத்தும் புரட்சிகரமான சித்தாந்தத்தை இந்த அணுகுண்டு யுகத்திலே அண்ணல் போதித்தார். இந்த சித்தாந்தத்தை இந்த விஞ்ஞான யுகம் ஏற்குமானல் நாட்டில் அமைதி நிலவும். அகங்காரம் அழியும். யுத்தக் கருவிகளை ஆக்குவதை விட்டு உலக நாடுகள் பஞ்சம், பிணி முதலியவற்றை நீக்க வழிவகைகளை மேற்கொள்ளலாம். வாழ்க காந்தி தீபம்! வளர்க அவர் இலட்சியம்!



**வி. யோகராஜா**
மெதடிஸ்த மத்திய கல்லூரி
15 - 1 - 54
பேச்சு.



குறு நடை: பதினன்கு

## எம். துரைராஜசிங்கம்

பிறந்த பொன்னுடு இருக்கும் வரையில் தமது பெயர்களும் சிரஞ்சீவியாக நிலைத்திருக்கும் பாக்கியம் பெற்ற அரசியற்றலைவர்கள் உலக சரித்திரத்திலே மிக மிகச் சிலரே! அதிலும், அறத்தினுல், மக்கள் வைத்திருந்த பேரன்பினுல், உலகம் முழுவதும் பரவிய புகழினுல் சிரஞ்சீவித்துவம் பெற்ற ராஜியவாதிகள் எண்ணிக் கையை விரல் விட்டு எண்ணி விடலாம்.

பரதன் என்ற அன்பும், பண்பும், ஆணவமும் மிக்க பேரரசனினுல் இந்தியாவுக்குப் பாரதம் என்ற பெயர் இன்றைக்கும் நிலைத்திருக்கின்றது. விக்கிரமாதித்தன், சாணக்கியன் முதலியவர்களையடுத்துப் புதிய சகாப்தங்களை தோற்றின. இந்த அரசியல் மகாமேதைகள் என்றென்றும் மக்கள் மனதை விட்டு அகலாமல் சாசுவதமாக இருந்து வருகிறுர்கள். இம்மாபெரும் மேதைகளின் வரிசையில் வந்தவர் மகாத்மாகாந்தி. அவர் நம்மை விட்டுப்

பிரிந்து சென்று இருபது ஆண்டுகள் முடிவடைந்து விட்டன. அவரது இந்த நூற்றாண்டு விழாவை அனுஷ்டிக்கும் பொழுது இன்று அவர் நம்மிடையில் இல்லையென்பதை நம்ப முடியவில்லை. எங்கும், எப்பொழுதும் அவர் நம்மிடையில் இருப்பதைப் போன்ற உணர்ச்சிதான் ஏற்படுகின்றது.

இந்தியாவுக்குக் காந்தி மகான் சுதந்திரம் பெற்றுக் கொடுத்தார் என்பதற்காக அவரை நாம் கொண்டாடுகின்றோமா? அப்படியும் சொல்லிவிட முடியாது. காந்தி பிறப்பதற்கு முன்பே, 1857ஆம் ஆண்டில், மெகலாயப் பேரரசின் கடைசி மன்னனான பகதூர்ஷாவின் தலைமையில் 'சிப்பாய்க் கலகம்' என்றழைக்கப்படும் முதலாவது இந்திய சுதந்திரப் போர் ஆரம்பமாகிவிட்டது. ஜான்ஸிகிராணி, வீரபாண்டியக் கட்ட பொம்மன், பகத்சிங் போன்று தமது உயிரையே அர்ப்பணித்த வீரர்கள் பலரும் சுதந்திர வீரர்களே. அத்துடன் லோகமான்ய பாலகங்காதர திலகர், மதன்மோகன் மாளவியா, சுபாஷ் போஸ், பாரதியார், சத்தியமூர்த்தி, சிறிநிவாச ஐயங்கார், கோகலே, அன்னிபெசண்ட் அம்மையார், நேரு போன்ற அநேகருடைய பெயர்களும் இந்திய சுதந்திரப் போராட்டத்திற் பிணைந்து நிற்கின்றன. ஆனால், இவர்கள் அனைவருக்குமில்லாத மகத்துவம் மகாத்மா காந்திக்கு மட்டுமிருக்கக் காரணம் என்ன? அந்த இரகசியம் என்ன? 'அறம்' என்ற மூன்றே எழுத்துக்களின் அந்த இரகசியத்தைச் சுருக்கிக் கூறிவிடலாம். அறத்தின் அவதார புருடராக வாழ்ந்தார். அறப்பாதையிலே அரசியல் போராட்டத்திற்கு ஒரு புதிய உத்வேகமும் சக்தியும் ஊட்டினார். அணுகுண்டைப் பார்க்கிலும் அறம் ஆயிரம் மடங்கு சக்தி வாய்ந்தது என்பதை அகிலம் உணரச் செய்தார். ''எங்கள் ஏகாதிபத்தியத்தில் சூரியன் அஸ்தமிப்பதேயில்லை'' என்று பெருமை பேசிய ஆங்கிலேய ஆட்சியின் அத்திவாரத்தையே அன்பு என்னும் ஆயுதத்தால் அசைத்து ஆட்டினார். கத்தி இன்றி



ரத்தமின்றிச் சக்தி மிக்கதொரு ஏகாதிபத்தியத்திடமிருந்து நாட்டை விடுவிக்க அறத்தை மட்டுமே ஆயுதமாகக் கைக்கொண்ட வீரபுருடரை உலக வரலாற்றில் இதற்கு முன்னர் கண்டதுமில்லை; கேட்டதுமில்லை. நல்லறம் மனித உருவில் நம்மிடையிற் சிறிது காலம் நடமாடியது என்ற மகிழ்ச்சியோடு ஆண்டுதோறும் அந்த மகானின் நினைவைக் கொண்டாடுகின்றோம். உலகம் உள்ளளவும் அவருடைய நாமம் நிலைத்து நிற்கும் என்பது நிச்சயத்திலும் நிச்சயம்.

''கிழக்கே உதிக்கும் சூரியன் மேற்கே உதித்தாலும் உதிக்கலாம். ஆனால், தருமம் ஒருகாலும் தோல்வியடையாது'' என்பதில் அசைக்க முடியாத நம்பிக்கை கொண்டிருந்தார் காந்தியடிகள். ஆங்கிலேய ஆட்சிதான் நமது எதிரியன்றி ஆங்கிலேயர் அல்ல என்பதை அவர் ஒவ்வொரு உரையிலும் வலியுறுத்தி வந்தார்.

பிரமாண்டமான இராணுவப் படைகளையும், பொலிஸ் படைகளையும், பீரங்கிகளையும் துப்பாக்கிகளையும் பக்க பலமாகக் கொண்டு அடக்குமுறை ஆட்சி நடாத்திய ஆங்கிலேய ஏகாதிபத்தியம் காந்தி மகான் தலைமையில் நடைபெற்ற ஆயுதமற்ற அறப் போராட்டத்தைத் தாக்கிப் பிடிக்க இயலாது சரிந்து விழுந்தது. அன்பு, அறம் ஆகியன முன் பலாத்காரம் உலக சரித்திரம் அறிந்திராதபடி படுதோல்வி யடைந்தது! இதில் ஒரு விந்தை என்னவெனில் தோற்றவர்கள் ஆங்கிலேயர்களோ இந்தியர்களோ அல்ல. பதிலாக ஆங்கில ஏகாதிபத்தியம் தோற்றது. ஆனால், ஆங்கிலேயர்களும் இந்தியர்களும் மாபெரும் வெற்றி பெற்றார்கள். எல்லா யுத்தங்களிலும் ஏதாவது ஒரு தரப்பு வெற்றி பெறும், மற்றொரு தரப்பு தோற்கும். ஆனால் காந்திமகான் நடாத்திய அறப்போரிலோ இருதரப்பினருமே வெற்றி பெற்றார்கள். அவர்களுக்கிடையில் நிலவிய மனக்கசப்பிற்குக் காரணமாக விளங்கிய ஒரு ஆட்சிமுறை தலைகுப்புறக் கவிழ்ந்தது.

‘‘இந்தியா என்றொரு நாடுண்டு; அங்கே ஏலம் கராம்பு பெறுவதுண்டு; பொன்னும் பொருளும் மிக உண்டு’’ என்ற அளவிலேதான் பதினோராம் நூற்றாண்டில் இந்தியாவை உலகம் அறிந்திருந்தது. பின்னர், படிப்படியாக இந்தியா ஆங்கிலேயர் பிடியிலே சிக்குண்டது. அப்பொழுது, ‘‘இந்தியா என்றொரு நாடுண்டு, அது ஆங்கிலேயக்கு நல்ல வேட்டைக் காடு’’ என்ற அவல நிலை ஏற்பட்டது. காந்தி மகான் இந்திய சுதந்திர விடுதலை இயக்கத்திற்குத் தலைமைதாங்கிய பிறகுதான், ‘‘இந்தியா என்ற நாடுண்டு; அங்கு அறமும் அன்பும் மிக உண்டு; சுதந்திர வேட்கையும் தாகமும் இதற்கு உண்டு’’ என்பதை உலகம் அறியலாயிற்று. அத்துடன் சுதந்திர இயக்கத்தை மக்களின் உள்ளத்திற்கு அருகே கொண்டு வந்தார். தீண்டாமை போன்ற தீய சக்திகளைத் தரைமட்டமாக்கினார். பிளவுபட்ட மக்களை ஒன்றுபடுத்தினார். பெண்ணினத்தின் விடுதலைக்குப் பாடுபட்டு அவர்களையும் விடுதலை இயக்கத்திற்குள் கொண்டு வந்தார். இந்தச் சக்திகள் அனைத்தையும் அன்பினால் கட்டி, அறத்தினால் வழி நடத்தி மாயவித்தை புரிந்து பாரத அன்னையின் அடிமை விலங்கொடித்தார். அந்த ஒப்பற்ற அண்ணல் காந்தியின் நாமம் என்றும் வாழ்க என்றுகூறி உங்களிடமிருந்து விடைபெறுகின்றேன்.



எம். துரைராஜசிங்கம்
புனித மிக்கேல் கல்லூரி
26 - 2 - 52
பேச்சு



குறுநடை: பதினைந்து

---

## எஸ். மொஹிதீன் பாவா

மாண்புடனே வாழ்ந்துவிட்டு, மேன்மை மிக அடைந்துவிட்ட, சத்தியத்தின் இருப்பிடமாம், மாந்தருக்குள் மாணிக்கமாம் அண்ணல் காந்திமகான், உலகோர்க்கு எடுத்துக்காட்டாக, மக்கள் மக்களாக வாழ வழிகாட்டி விளக்கந் தந்த ஓர் உத்தமன். இவர், ஒரு சமூகச்சீர்திருத்தவாதி; அரசியல் தலைவன்; அகிம்சா வீரன்; அன்பின் திருவுரு; இந்தியாவின் விடுதலைவீரன்; கல்வித் தத்துவஞானி;— இவ்வாறு வையகமே வாழ்த்துரைக்கும் அண்ணல் இவ்விருபதாம் நூற்றாண்டிலேயே வாழ்ந்து மறைந்த ஆசியஜோதியாவர்.

இவர் தனக்கென வாழாப் பிறர்க்குரியவராகச் சிறுவயதிலே விளங்கிய காரணத்தால், இந்திய நாட்டு மக்கள் அன்னியர் ஆட்சியின் அடிமைகளாக அவர்தம் அடிச்சுவடு பற்றிக் குற்றேவல் புரிந்து குன்றிக்கிடப்பதைக் கண்டு கண்ணீர் வடித்தார். கரைகாணாத் துன்

பக் கடலில் மூழ்கினுர். செய்வ தென்ன வென்று தெரியாது திகைத்தார். பலவாறு சிந்தித்தார். செயலில் இறங்கினுர். அறப்போர் என்னும் ஆயுதத்தை கரத்தில் ஏந்திய வண்ணம், ''இந்திய தேசிய காங்கிரஸ்'' என்னும் மகாசபையின் துணைகொண்டு அன்னியர் ஆட்சியை எதிர்த்து, அரசியல் தலைவனுக முன் நின்று, இந்தியாவின் அரசியல் அடிமைத் தளையை பூண்டோடு அறுத்தெறிந்து இந்தியாவிற்குச் சுதந்திரம் பெற்றுக் கொடுத்த ஓர் உத்தமன்.

இவ்வாறு ,இவர் ஓர் அரசியல்வாதியாக இருந்தது மட்டுமன்றி, அவரது வாழ்க்கையில் பெரும் பகுதியை சமூகச் சீர்திருத்தத்திற்காகவே செலவிட்டார். இவர் மக்களுக்கு எதைச் சொன்னுலும் அதைச் சோதனை செய்து, போதனைக்குப் பின் சாதனை செய்துகாட்டினுர். இவர் இந்திய ஏழைமக்கள் படும் அவல நிலையைக் கண்டு மனம் வெதும்பினுர். ஏழை மக்களுக்குத் தொண்டு செய்வதே தன் குறிக்கோளாகக் கொண்டு அவர்களுக்கு என்ன என்ன, எப்போது தேவைஎன அறிந்து அதற்கு ஆவன செய்தவர்.

மேலும், தீண்டாமை என்னும் விதண்டாவாதத்தை அகற்றி ஒழித்துவிட அயராது உழைத்தார். ஒருவன் செய்யும் தொழிலைக் கொண்டு, அவன் உயர்ந்தவன், இவன் தாழ்ந்தவன் என்று ஒதுக்கி வைத்து வாழும் மக்களை இவர் அடியோடு வெறுத்தார். எங்கு தாழ்த்தப் பட்ட மக்கள் எனக் கருதப்படுபவர்கள் செல்ல முடியாதோ, அங்கே அவரும் செல்லமாட்டார். அரிசனர்கள் செல்லமுடியாத கோயில்களுக்குள் அவரும் நுழையமாட்டார். அவர்களுக்குக் கிடைக்காத சுதந்திரம் தமக்கும் வேண்டியதில்லை என வெறுத்தார். 'மன்னுயிரெல்லாம் கடவுளின் திருவுருவம்'' என்னும் கொள்கையுடையவராக வாழ்ந்தார்.



இவர் 'யாகாவராயினும் நாகாக்க' என்னும் வரம்பிற்குட்பட, மறந்தும் தீய சொல் சொல்லாது, பிறர் உள்ளத்தைப் புண்படுத்தாது, நகைச் சுவையுடையவராக, வாரத்திற்கு ஒரு நாள் மௌன நோன்பு நோற்று செயல் முறையில் தம் நாவைப் பழக்கினுர். அது மட்டுமன்றி, மற்றவர்களிடமும் பொய் சொல்லாது, உண்மையுடன் வாழ்க்கை நடத்த அயராது உழைத்தார்.

இவர் மதுவினுல் ஏற்படக்கூடிய தீங்கையும், அதன் கெட்ட குணங்களையும், மக்களுக்கு எடுத்தியம்பி, மது ஒழிப்பு இயக்கம், என்ற ஓர் இயக்கத்தை ஆரம்பித்தார். அதன் மூலம் மதுவகைகளை ஒழிக்க அயராது உழைத்தார். வீட்டிற்குள் அடைபட்டுக் கிடக்கும் பெண்களின் பெருமையை உணர்த்தி 'பெண்கள் கல்வி இயக்கத்தை' ஏற்படுத்தினுர். பெண்கள் விடுதலையுடன் வாழவேண்டும் என உணர்ந்த அண்ணலார் 'பெண்கள் விடுதலை இயக்கம்' என்ற ஓர் இயக்கத்தையும் ஆரம்பித்து அதற்கு முன்னின்று உழைத்தார்.

வங்காளத்தில் நவகாளிப் பகுதியில், 'இந்து முஸ்லீம்' இனக்கலவரம் ஏற்பட்டபோது அதைச் சமாதானப்படுத்தி இவ்விரு சமூகத்தினருக்கு மிடையில் ஒற்றுமையை ஏற்படுத்த இரவு பகலெனப் பாராது, கொடுமைகள் பல நிறைந்த கிராமங்களின் மூலை முடுக்குகளுக்கெல்லாம் தமது ஊன்றுகோலைத் துணையாகக் கொண்டு அம் மக்களின் துயர் துடைக்க தமது வயோதிபப் பருவத்திலும்அயராது உழைத்தார்.

இவர் பகைவர்களைப் பகைக்காது, அவர்களுக்கு அருள் கூர்ந்து மனமிரங்கி தன்னுயிர் போல் மன்னுயிரையும் நேசிக்கும் மனுேபாவங் கொண்டவர். தனது பல் ஒடியுமாறு உதைத்தவரையும் சினங் கொள்ளாது, இன்முகம் கொண்டு நோக்கியவர்.

இவ்வுத்தமன் செய்த சமூகச் சீர்திருத்தம் எந்த ஒரு சமூகத்தினருக்கோ, அல்லது சமயத்தினருக்கோ உரித்தானதாக இல்லாமல், அகில உலக மக்கள் யாவருக்கும் பொதுவானதாகவே இருக்கிறது. அண்ணலார் இறைபதத்தை வாழ்ந்து எம்மை விட்டுச் சென்றாலும் அவர் காட்டிய அகிம்சா வழி உலகுள்ளளவும் இறவாப் புகழுடன் நிலைத்து நிற்கும் என்பதில் எட்டுணையும் ஐயமில்லை. அன்பு வழிகாட்டிய அவ்வுத்தமனின் வாழ்க்கையின் வழி முறைகளைப் பின்பற்றி நாமும் நடந்தால் அதுவே நாம் அண்ணலுக்குச் செய்யும் கைம்மாறாகும்.



**எஸ். மொஹிதீன் பாவா**
பட்டிருப்பு ம. வி.
25 - 10 - 51
கட்டுரை



சிறுநடை: பதினாறு

## இ. தாமோதரம்பிள்ளை

'உத்தமராம் காந்தியை உவந்து பேச
கவிபாடிப் பெருமை செய்யக் கம்பனில்லை
கற்பனைக் கங்கில்லை அந்தக் காளிதாசன்
செவிநாடும் கீர்த்தனைக்குத் தியாகரில்லை
தேசிய பாரதியின் பின் நிறமுமில்லை.'

இவ்வாறு செந்தமிழ் பண்ணிசைத்தான் நாமமிகு நாமக்கல் இராமலிங்கம்பிள்ளை. உடல், பொருள், ஆவி மூன்றையும் பண்புடை பாரதத் தாயின் திருப்பாதங்களிலே தாரைவார்த்துக் கொடுத்த தன்னலமற்ற தனிப் பெருந்தலைவர் காந்திமகான். நாற்பது கோடி மக்களின் கண்கள் சுரந்த கண்ணீரையே தனது பெரு நாடியின் செந்நீராகக் கொண்டு மாபெரும் வெற்றிக்கும் வழி வகுத்தார் காந்திமகான். இதற்குக் காரணம் அவர் வாழ்க்கையில் பின்னிப்பிணைந்திருந்த சீரிய சிறப்பு மிகு கொள்கைகள் என்றால் மிகையாகாது. அவைதான் காந்

தீயம் என்னும் எதிரொலியாகக் காந்தியின் அருள் ஒளி
போல் எம்செவியிலே ஒலிப்பன. காந்தீய தத்துவம் இவ்
வுலகிற்கு புதுமையானது. புராண இதிகாசங்களிலும்
கூடத் தேடியும் கிடைக்காதது. புராணங்கள் என்ன கூறு
கின்றன? நல்லவர்களைக் காக்கவும் தீயவர்களை அழிக்க
வும் பகவான் அவதரித்தார் என்பதே.

இராமாயணத்திலே 'நீடிய அரக்கர் சேனை நீறுபட்
டொழிய வாகை சூடிய' என்று இராமனின் பெருமை
கூறப்படுகின்றது. நம் கண்ணன் பிறந்ததும் துஷ்ட
நிக்கரக, சிஷ்ட பரிபாலனஞ் செய்வதற்காகவே. முரு
கப் பெருமானுடைய திரு அவதாரமும் இப்புவியில்
நிகழ்ந்தது. காந்தி மகாத்மாவின் சித்தாந்தம் பகைவர்
களையழிப்பதன்று. பகைவர்களுக்கு இரங்குவது. இன்னா
செய்தார்க்கும் இனியவை செய்யத் தூண்டுவது. ஆகவே
தான் காந்தீய தத்துவம் உலகிற்குப் புதுமையானது. தன்
னுயிர் போல், தனக்கு அழிவெனினும் பிறவுயிர் தன்னை
யும் காத்தல்! மன்னுயி ரெல்லாம் கடவுளின் வடிவம்
என்ற கொள்கைகளை போர், கொலை, தண்டம் என்பன
நிகழும், அரசியலிலும் பின்னியுள்ளார். காந்தி தன்
வாழ்க்கையில் பல சோதனைசெய்து பார்த்தார். அவற்
றை செயலிலும் சாதனை செய்யும்படி வற்புறுத்தினார்.
இப்படியாக சோதனை, சாதனை, போதனை என்னும் முடி
புகளிலும் தன்னை உருவாக்கிக் கொண்ட மகாத்மா மன்
னர்களை மதிக்கவில்லை. பணக்காரர்களைத் துதிக்கவில்லை.
மாருக ஏழைகளைப் பற்றியே சிந்தித்தார். பணக்காரர்
களின் பங்காளியாக வாழ்வதைவிடப் பாட்டாளிகளின்
கூட்டாளியாக வாழத் தலைப்பட்டார். கொண்டவளை
விலை பேசி விற்கினும் விற்பேன், உண்மையிற்றவறேன்'
என வாழ்ந்த அரிச்சந்திரனுக்குந் பெருமை கொடுத்த
வாய்மையைப் பாரதச்செல்வர்கள் யாவரும் தாரக
மந்திரமாக ஏற்ற வேண்டும் என வற்புறுத்தினார். தர்ம
வழிவந்த சத்தியசீலராக வாழ்ந்து காட்டினார். பெற்ற
வளிடம் கொடுத்த சத்தியத்தை இம்மியும் பிசகாது



காத்தார். ஆயிரம் மைல்களுக்கப்பால் இருப்பினும் அவ
ருடலை மதுவோ, மாமிசமோ, மங்கையோ கனவிற்
கூடத் தீண்ட முடியவில்லை. உல்லாச சல்லாபங்களை
உற்று நோக்குகின்ற போதெல்லாம் உதைபட்டு
மிதிபடும் இந்தியர்களின் கண்ணீர் சிந்தும் வதனம் அவர்
கண்முன்னே காட்சியளித்தது. மதுக்கிண்ணமும் மாமிச
மும் அலைமோதும் நேரமெல்லாம் விரித்ததலை சீவிமுடிக்
காமல் கலங்கும் பாரதத் தாயின் அவல நிலைதான் சிந்
தையில் காட்சிகொடுத்து அசத்தியம் காத்திட வேண்டும்
என்று இந்திய மக்களிடம் இருகரம் நீட்டி வேண்டினர்
அண்ணல் காந்தி.

'சாதி இரண்டொழிய வேறில்லைச் சாற்றுங்கால்
நீதி வழுவா நெறிமுறையில்—மேதினியில்
இட்டார் பெரியோர் இடாதார் இழிகுலத்தோர்
பட்டாங்கி லுள்ளபடி'

என்று பாடிய ஔவைப் பிராட்டியின் தத்துவத்தை
மறந்து தீண்டாமை தலைவிரித் தாடிய காலம் காந்தி
வாழ்ந்த காலம். தீண்டக்கூடாது என்ற இப்பயங்கர
நோய் பாரத மக்களின் அறிவுக் கண்ணையே மறைத்து
நின்றது. தீண்டப்படாது எனக் கூறுவதே தீமை என்று
அதைப் பூண்டோடு ஒழிக்க விரதம் பூண்டார் அண்ணல்
காந்தி. தொழுநோயாளர்களைத் தொட்டுப் பராமரித்
தார். தாழ்ந்தவனிடம் தந்தையைப் போன்று பழகி
னர். சேரி என்ற நரக உலகத்திலே கேட்பாரற்ற அவ
லச்சூழ்நிலையிலே பாப்பாரற்ற அனைதகளாய் உழலும்
ஏழை மக்களிடம், தீண்டாச்சாதி என்று சமுதாயம்
தள்ளி வைத்தவர்களிடம், அன்புடன் பழகி ஆசிரமத்
திற்கு அழைத்து வந்தார், பரம்பரை பரம்பரையாக குரு
தியோடு இரண்டறக் கலந்த தீண்டாமை என்னும் பயங்
கரப் பிணியைப் போக்குவதற்காக! அந்நியரை வெற்றி
பெற வேண்டுமானல் எம்மிடையே சகோதரத்துவம்.
டத்தொளிர்வு பெறவேண்டுமெனப் பறைசாற்றினர்

‘பழிக்குப் பழிவாங்கும் பயங்கரம் பாரத சமுதாயத்திடம் இருந்து விலகி ஓட வேண்டும்; ஒரு கன்னத்தில் அறைந்தால், மறுகன்னத்தையும் திருப்பிக்கொடு’ என்ற யேசு பெருமானின் திருவாக்கினைப்போல் இம்மை செய்பவரையும் மன்னிக்கும் இதயமே வெற்றிக்கு வழிகோலும் எனப் பகன்றார். இதற்காக அடிபட்டும், சிறைபட்டும் வாழ்ந்தார். அடித்தவர்களை ‘அன்பே’ என்றார்; உதைத்து மிதித்தவர்களை ‘உத்தமனே’ என்று போற்றினர்!

காந்திகாட்டிய காந்தீயம் ஒரு சாத்வீகப் போராட்டம். அங்கு குருதியாறு பெருக்கெடுத்து ஓடவில்லை. மாறாகத் தர்மப் பேரருள் பெருக்கெடுத்தது. அன்பு, அகிம்சை, சத்தியம், என்னும் ஆயுதங்களை ஆதாரமாகக் கொண்டு அந்நியரின் சக்திமிக்க போராயுதங்கள் யாவும் காந்தியின் சாத்வீக ஆயுதங்களின் முன் தூள் தூளாகின. கொடிய விலங்குத் தன்மை எளிய மனிதத் தன்மையின் முன் மண்டியிட்டது. அவரது ஆத்மீகத் தன்மை அந்நிய நாட்டாரின் ஆட்சியின் ஆணிவேரையே பிடுங்கி விட்டதென்றால் மிகையாகாது.

பலாத்காரத்தினால் அந்நிய ஏகாதிபத்திய வாதிகளிடமிருந்து வெற்றியை எதிர்பார்க்க முடியாது. பொறியடக்கமே உயர் நிலைப்படுத்தும், சிற்றின்ப ஆசைகளை அடக்குதலே வெற்றிப் பாதையின் திறவுகோலாகும். இதற்காகவே சத்தியாக்கிரகம் என்னும் உண்மைக் கொள்கையை ஆரம்பித்தார்.

எங்கு மனிதாபமான முறையில் அன்பால் ஆட்சி நடை பெறுகின்றதோ அங்கு காந்தீயம் மிளிரும். எங்கு அகிம்சை முரசொலி எழும்புகின்றதோ அங்கு காந்தீயம் ஒளிரும். எங்கு சத்தியம் வெற்றி பெறுகின்றதோ அங்கே காந்தீயம் தளிர்க்கும். அன்பே சத்தியம்; சத்தியமே அன்பு. காந்தீயம் கடைப்பிடிக்கப்படும் இடங்



களில் எல்லாம் காந்தியின் பொக்கை வாய்ப் புன்சிரிப்பு, புத்தொளிர்வு ஊட்டிக் கொண்டே இருக்கும். கருணை அன்பு, சகோதரத்துவம் இம்மூன்றும் ஒருங்கே சேர்ந்ததே காந்தீயம்.

‘சத்தியம் வென்றது சாந்தம் பலித்தது
தர்மம் பிழைத்ததடா

கத்தியும் ரத்தமும் இன்றியே பாரதக்
கைத்தளை வீழ்ந்ததடா

சத்திய சக்கரம் தாயின் மணிக்கரம்
தன்னில் சுழன்றதடா

சாந்த சொரூபனின் காந்தியில் மூழ்கியே
ஞாலமும் நின்றதடா



இ. தாமோதரம்பிள்ளை
வின்சன்ட் மகளிர் உயர் பாடசாலை
1 - 10 - 50
பேச்சு



குறுநடை: பதினேழு

## எம். விமலாவதி

மகாத்மாவின் வாழ்க்கை வரலாற்றைப் பலரும் பல கோணத்திலிருந்து ஆராய்வர். அன்னாரின் வாழ்க்கை முறை உயர்ந்த குறிக்கோளை யுடையதாகவும், உலகோர்க்கு ஒளி பரப்பக் கூடியதாகவும் மிளிர்கிறது. உலகை உய்விக்க வந்த புத்தபிரான், ஏசுமகானைப் போன்றே இவரை மக்கள் போற்றிப் புகழ்கின்றனர். அவருடைய கருத்துக்களெல்லாம் பெரும் சீர்திருத்தங்களை மையமாக வைத்தே கூறப்பட்டன. அவர் அரசியற்துறை மட்டுமன்றி, பொருளாதார, சமுதாயத் துறைகளையும் மாற்றியமைக்க முற்பட்டார்.

காந்தி நூற்றாண்டு விழாக் கொண்டாடும் இவ்வேளையில், அக்கால இந்தியாவின் நிலையை சிந்தித்துப் பார்த்தல் பொருத்தமானதாகும். அரசியல் துறையில் அந்நியர் ஆதிக்கம்; ஆங்கிலேயரின் அடிவருடிகளுக்கு அரசபோகம்; சுதந்திர வாஞ்சை கொண்ட சுதேசி



களுக்குக் கசையடி; சிறைத் தண்டனை! இதனால் அரசியற் புரட்சியை ஏற்படுத்தும் வகையில் பல பயங்கர இயக்கங்கள் தோன்றலாயின. எங்கும் பயங்கர நிலை; நாட்டில் அமைதியின்மை. பசிக்கொடுமையினாலும், வறுமையினாலும் மக்கள் அல்லற்பட்டனர். எது புண்ணியம்? எது பாவம் என்னும் வித்தியாச மறியாது துயர் உற்றனர். இச்சந்தர்ப்பத்தில் இந்தியப் பருத்தி சீமைக்குக் கப்பலேறி, மதிப்புயர்ந்த லங்காஷயர் துணியாக வந்து குவிந்தது. இவற்றின் தரத்தை எவ்வளவுக்கு உயர்த்தி, கூடிய விலைக்கு விற்க முடியுமோ, அவ்வளவுக்கு சுதேச மக்களிடமிருந்து கொள்ளை லாபமடித்தனர். கடனாளிகளாகவுமாக்கினர். பணம் படைத்தவககள் சுக போக வாழ்க்கையில் சுகிக்க, வறியவர்கள் வறுமையால்வாடித் துன்பப்பட்டனர். இந்நிலையில் இந்தியாவின் பொருளாதார நிலை குட்டிச் சுவராகவே காணப்பட்டது.

இன்றைய நிலையில் அன்றைய இந்தியாவை கற்பனை செய்வதே கடினமாக உள்ளது. இந்தியா எங்கும் ஆயிரம் பிரிவினை! இந்து முஸ்லீம் பிரச்சினை; தாழ்ந்தோன் உயர்ந்தோன் என்ற சாதிப் பாகுபாடு! இங்கிலாந்தில் தெருக் கூட்டிய வெள்ளையனோடு பந்தி போசனமிடுவது பெரும் கௌரவமாக நினைத்த உயர் சாதி இந்தியனுக்கு, கீழ் நிலையிலிருந்து வந்த சுதேச அதிகாரிகளோடு வாழ்தல் இழுக்காகவும், அருவருப்பாகவும் இருந்தது.

இந்நிலையில் பல கோடி இந்தியரைச் சில ஆயிரம் ஆங்கிலேயர் வெகு காலமாக அடிமைப்படுத்தி வைக்கக் கூடியதாக இருந்தது.

பெண்களைத் தொழுவத்தில் வசக்கிக் கட்டும் மிருகங்களாக மதித்தனர். இன்றோ நிலை தலைகீழாகி விட்டது. இந்தியாவின் தலைமைப் பதவியே ஒரு பெண்ணின் கையிலேதான் உள்ளது. உலகின் பொதுச் சன[illegible]

ஐ. நா விற்கூட ஒரு பெண் தலைமைப் பதவி வகித்த
தென்றால், அது இந்தய மண்ணிலே பிறந்த பெண்
ணெனின் பெருமை எனில் மிகையாகா. இவர்கள் யாவரும்
காந்திஜி வாரிசுகள். காந்திஜியின் சீர்திருத்தங்களில் மிக
உயர்வானதும், சத்வீகமானதும், ஆங்கிலேயரை வெற்றி
கொள்ளப் பயன் படுத்திய ஆயுதமாகவும் சத்தியாக்
கிரகம் விளங்குகின்றது. கடற்படையில் தங்களுக்கு
ஒப்பாரும் மிக்காருமில்லை என்ற மமதை கொண்டு.
உலகின் பல பகுதிகளையும் தங்களின் கொடுமையான
ஆட்சிக்குட்படுத்தி, சகல வல்லமை பேசிய ஆங்கிலே
யரை, மகாத்மா எளிய முறையில், ஒரு துளி இரத்
தஞ் சிந்தாமல், சாத்வீகத்தையும் அகிம்சை யையும்
ஆயுதமாகக் கொண்டு புதியதோர் சகாப்தத்தை
உலகோர்க்கு அறிமுகப்படுத்தனர்.

அவர் அறிமுகப்படுத்திய ''சத்தியம், அகிம்சை'
என்னும் மந்திரங்கள் ஆரம்பத்தில் வெறும் கேலிக் கூற்
ருகவே இருந்தன. நாளடைவில் செயலுருவம் பெறத்
தொடங்கியதும் ஆங்கிலேயரை நடு நடுங்கச் செய்தது.
அகிம்சா வழியில் நடைபெற்ற சத்தியாக்கிரகத்தால்
பாரதம் தனது உரிமையில் வெற்றி பெற்றது. இதற்காக
காந்திஜி பட்ட துன்பங்களோ கணக்கிலடங்கா. அவர்
எம்மை விட்டு மறைந்திருப்பினும் அவரால் போதிக்கப்
பட்ட சாத்வீக இயக்கம் இந்த உலகம் உள்ளளவும் குன்
றில் ஏற்றிய தீபம் போல் பிரகாசிக்கும் என்பது உறுதி

அரசியல் தர்மத்தைப் போதித்த அம்மகான் பொரு
ளாதாரத்தில் தன்னிறைவை பெறும் வழி முறையினையும்
எடுத்தோதியுள்ளார். ஏழைகளின் வாழ்க்கைக்கும் ஏகா
திபத்திய வாதிகளின் சுரண்டலைத் தடுப்பதற்கும் தானே
முன் மாதிரியாக ராட்டையில் அமர்ந்து நூல் நூற்றும்
காட்டினர். சுதேசப் பொருட்களின்மீது மக்கள் மதிப்பு
வைக்க வேண்டும், பிற நாடுகளுக்கு நம்பணஞ் செல்லக்
கூடாது என்ற முழுத்துவ நோக்கை ஈடு செய்யும் வகை
யில் கைத்தறித் துணியைத் தானே கட்டி மற்றவர்



களுக்கு எடுத்துக் காட்டாக விளங்கினர். மகாத்மாவின்
இச்செயல் அடிமை நாடுகளின் பொருளாதார வளர்ச்
சிக்கு கலங்கரை விளக்கம் போலிருந்தது.

கலப்பு மணத்தை ஆதரித்த காந்தி, ''ஒன்றே குலம்,
ஒருவனே தேவன்'' என்ற முறையில் தாழ்த்தப்பட்ட
வர்களுடன் தானும் ஒருவனுக வாழ்ந்து காட்டினர்.
அரிசனங்களின் மத வழிபாட்டிற்காக அடைக்கப்பட்டி
ருந்த கோவில் கதவுகளைத் திறந்து, சமூகத்தின் குறைபா
டுகளைப் போக்கி, இந்து மதத்திலே மறுமலர்ச்சியைத்
தோற்றுவித்தார்.



எம். விமலாவதி
ஆனைப்பந்தி பெண்கள் ஆங்கில பாடசாலை
29 - 1 - 50



# MAANAAKKARIN GANDHI

பொன.அநுரா த.சிவமணி பொன்.மேகலா கா.கனகசுந்தரம்
ஆர்.சோமசுந்தரம் த.சதானந்தம் எஸ்.தம்பிராஜா
வி.சாந்தராஜ் ரி.ஜெயவேணி தி.காஞ்சனா கே.சஞ்சீவரத்தினம்
ரி.விஜயகுமாரி வி.யோகராஜா எம்.துரைராஜசிங்கம்
எஸ்.மொஹிதீன்பாவா இ.தாமோதரம்பிள்ளை எம்.விமலாவதி

first published in ceylon
under the auspices of
ilampirai
by
m. a. rahman
of arasu publications
on the occasion
of gandhi centenary (1969)
&
printed in ceylon by
rainbow printers
231 wolfendhal street colombo 13